# மன்றம்

இரா. நெடுஞ்செழியன். எம். ஏ.

ர் 3 | 15 - 11 - 54 | இதழ் 1




அமெரிக்காவில் அடிமைகள் விற்கப்பட்ட காட்சி!


ள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5



## சந்திரோதயம் நாடகத்தில் அண்ணா

அறிஞர் அண்ணா அவர்கள் பொது வாழ்வில் ஈடுபட்ட பொழுதில், முதலில் சிறந்த பேச்சாளராக, எழுத்தாளராகப் பெயர் பெற்றார். பின்புதான், அவர் ஒரு சிறந்த நாடகாசிரியர் என்பதும், அத்துடன் நாடகங்களில் நடித்தபொழுது அவருடைய நடிப்புத் திறமையும் வெளிப்பட்டது. முன்பு புறம்பானதாகக் கருதப்பட்ட நாடகக் கலையில், அரசியல்காரர்களும், படித்தவர்களும் ஈடுபட்டு, அரசியலுக்கு நாடகத்துறையை சிறந்ததொரு பக்கதுணையாக ஆக்கிய பெருமை அண்ணாவைச் சாரும்.

அறிஞர் அண்ணா முதலில் எழுதி, நடித்த நாடகம் "சந்திரோதயம்" ஆகும். அதில் முக்கிய பாகமான துரைராஜ் வேடத்தை அண்ணா அவர் ஏற்று நடித்தார்கள். மற்றும் அதில் நடித்தோரில் பலர், அண்ணாவுக்குத் தெரிந்த நண்பர்கள், "திராவிட நாடு" அலுவலகத்தில் பணியாற்றியவர்கள். அதற்கு முன் நடித்து பழக்கமில்லாதவர்கள் ஆவார்கள். அவர்கள் எல்லோரையும் வைத்து, அண்ணாவின் "சந்திரோதயம்" வெற்றிகரமாக நடந்தேறியதுடன், கட்சிக் கொள்கைகளை நாடக அளவில் பரப்புவதற்கு வழிகாட்டியாக இருந்தது. சந்திரோதயத்தின் வெற்றிக்கு முக்கிய காரணமாயிருந்தது, அண்ணாவின் எழுத்தும், நடிப்பும் தான்.

1943 இறுதியில் சிதம்பரத்தில் அண்ணாவின் "சந்திரோதயம்" நடைபெற்றது. அண்ணா துரைராஜாக நடித்தார்.

நாடகத்தில் வரும் துரைராஜ், கடையில் விஷத்தைக் குடித்து இறக்கும் கட்டம் வந்தது. துரைராஜ் விஷக் கோப்பையைக் கையிலெடுத்து அருந்தப் போனான்.

திடீரென்று "நிறுத்துங்கள்!" என்று கூச்சல் வந்தது. எங்கிருந்து என்று பார்த்தால், நாடக மேடையிலிருந்தல்ல. கீழிருந்து, நாடகத்திற்குத் தலைமை வகித்தவர் எழுந்து நின்று அவ்வாறு சொன்னார். ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. நாடகம் அப்படியே தடைப்பட்டது. துரைராஜ் விஷக் கோப்பையைக் கையில் பிடித்தபடி இருந்தார். தலைமை வகிப்பவர் மேடை மீது ஏறினார். "இது கூடாது. அண்ணா அவர்கள் விஷங் குடிப்பது கூடாது அவர் ஏன் இறந்துபோக வேண்டும்? அவர் இஷ்டப்பட்டால், இதுபோல ஜமீன்தாரராக இருக்க முடியாமல், போய்விடாது. அண்ணா விஷங் குடிப்பதை நான் பார்த்துக் கொண்டிருக்க முடியாது!" என்று உணர்ச்சிப் பெருக்குடன் பேசினார். மற்றவர்கள் அவரைச் சமாதானப் படுத்தி உட்கார வைத்தார்கள். அந்த அளவு அண்ணாவின் சோகப் பேச்சும், நடிப்பும் அதில் இருந்தது.

# மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

**15 - 11 - 54 திங்கட்கிழமை**


## இரண்டாவது திட்டம்

டில்லி மத்திய சர்க்கார் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்துக்கு வழிகோல ஆரம்பித்துவிட்டனர். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு அவர்கள் ஒதுக்க நினைக்கும் முதல் 5,500 கோடி ரூபாய்களாகும்!

முதல் ஐந்தாண்டு 1951—1956 வரை திட்டமிடப்பட்டு, இன்னும் பகுதி முடிந்தும் முடியாமலுமிருக்கிறது. அந்தத் திட்டத்துக்கு மதிக்கப்பட்ட தொகை 2069 கோடி ரூபாய்களாகும். இதில் ஒரு பகுதி பணத்தைச் சர்வதேசப் பாங்கியிலிருந்து பெற்றும், மற்ற வற்றை மாநிலங்களிலிருந்து வசூலித்தும், பட்ஜெட்டில் ஒதுக்கியும் நடத்த டில்லி சர்க்கார் வேலை செய்துவருகிறது. ஆனால் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஐந்தில் மூன்று பங்கிற்குமேல் இந்த மூன்று ஆண்டுகளில் முடிந்திருக்க வேண்டும். ஆனால், அதனால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள உருவான பலன்கள் எதுவும் குறிப்பிடத்தக்கதாகத் தோன்றவில்லை.

2069 கோடி ரூபாயில் திட்டமிடப்பட்ட முதல் திட்டத்தில், தென்னாட்டுக்கு எத்தகைய பலன் கிடைத்தது என்றால், உண்மைத் தேசியத் தோழர்களும் வேதனை கொள்ளுமளவுக்கு, மிகக் குறைந்த அளவில்தான் வந்திருக்கிறது. அணைகள், நீர்ப்பாசனங்கள் போன்று பெரும் திட்டங்கள் தீட்டப்படும்பொழுது, அவையெல்லாம் வடநாட்டிலேயே நிர்மாணிக்கப்படுகின்றன.

200 கோடி ரூபாய்க்குமேல் அளவிடப்படுகிற தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம் வடநாட்டில்.

133 கோடி ரூபாய் திட்டத்தில் உருவான பக்ரா—நங்கல் அணைத்திட்டம் வடநாட்டில்.

66 கோடி ரூபாயில் உருவாகும் கோசித்திட்டம் வடநாட்டில், பீகார் மாகாணத்தில்.

35 கோடி ரூபாயில் உருவாகும் ரிகண்ட் திட்டம், வடநாட்டில் உத்தரபிரதேசத்தில்.

34 கோடி ரூபாய் அளவில் கட்டப்படும் சம்பால் நதித்திட்டம் வடநாட்டில் மத்தியபிரதேசத்தில்.

33 கோடி ரூபாயில் திட்டமிடப்படும் கொயனா திட்டம் வடநாட்டில், பம்பாய் மாகாணத்தில்.

இப்படி முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் கொடுக்கப்பட்ட புதுத் திட்டங்கள் பெரும்பாலும், வடநாட்டை வளம்படுத்தவே பயன்பட்டுள்ளன. தப்பித்தவறி, ஒன்றிரண்டு, கீழ் பவானி, மாலம்புழா போன்ற சிறு திட்டங்கள் தென்னாட்டுக்குத் தரப்பட்டன. அவற்றை வடநாட்டில் உருவான திட்டங்களுடன் ஒப்பிட்டால், யானைக்கும் பூனைக்கும் உள்ள வேற்றுமை இருக்கும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், அணைக்கட்டு, பாசன அமைப்புகள் இவைகள் மட்டுமின்றி, புதுத் தொழிற்சாலைகளும் வடநாட்டில் உண்டாக்கப்பட்டுள்ளன.

மத்திய அரசாங்கத்தால் நடத்தப்படும் பெரும் தொழிற்சாலைகளைப் பார்க்கலாம்.

15 கோடி ரூபாயில் சித்ரஞ்சன் ரயில்வே தொழிற்சாலை, வடநாட்டில், வங்காள மாநிலத்தில்.

23 கோடி ரூபாய் சிந்திரி தொழிற்சாலை, வடநாட்டில்.

5 கோடி ரூபாய் பேப்பர்மில் ஒன்று. வடநாட்டில் உத்திரபிரதேசத்தில்.

இதைப்போல இன்னும் பலப்பல தொழிற்சாலைகள், பெனிசிலின், டி. டி. டி. போன்ற மருந்து உற்பத்திசாலைகள் எல்லாம் வடநாட்டிலேயே உருவாக்கப்பட்டுள்ளன.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், வடநாட்டில் வளங்கள்—தொழில்வளங்கள் குவிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. திராவிடம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. வடநாட்டில், ஆலைகளும் தொழிற்சாலைகளும் வளர்ந்திடும்பொழுது, திராவிடத்தில் இருக்கும் சிறு தொழில்களும் தேய்ந்துபோகுமளவுக்கு பொருளாதாரம் தாழ்ந்துபோயிருக்கிறது. ஐந்தாண்டு திட்டங்களினால், வடநாடு பொருள்களை உற்பத்தியாக்கும் தொழில்மயமான நாடாகவும், திராவிடம் விவசாயக் காடாக, வடநாட்டுப் பொருள்களை வாங்குவதற்குத் தகுந்த சந்தைக்கூடமாகவும் ஆக்கப்பட்டுவிடுகிறது.

இந்த நிலையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்படுகிறது 5.500 கோடி ரூபாய் செலவில். இதில் நூறில் ஒருபங்கு—55 கோடி ரூபாயாவது திராவிடத்துக்குப் பயன்படும் விதத்தில் செலவழிக்கப்படுமா என்பது சந்தேகமே!

# கருத்துக் கதிர்

## சீனத்துச் செய்தி

சீனா சென்று திரும்பியுள்ள இந்தியப் பிரதமர் நேரு, சீனாவில் தான் கண்ட காட்சிகளைப் புகழ்ந்து பேசியுள்ளார். அவருக்குக் கிடைத்த வரவேற்பும், அவர் கண்ட பல மாறுதல்களும், அவருக்குக் குதூகலத்தை அளித்துள்ளன என்பது தெளிவாகத் தெரிகிறது.

சீனாவில் வளர்ந்துள்ள முன்னேற்றங்களை' அந்நாட்டின் பொருளாதாரத்திலும் தொழில் வகையிலும் ஏற்பட்டுள்ள பெரும் மாறுதல்களை நேரில் கண்டு திரும்பிவந்துள்ள நேரு பண்டிதர், தாம் கண்டவற்றைப் பற்றிப் புகழ்ந்து பேசுவதுடன் மட்டும் நின்றுவிட்டால் போதாது. நேரு வெறும் பேச்சாளியாக —காங்கிரஸின் முன் செல்லும் பிரசாரயந்திரமாக மட்டுமல்ல, இந்திய துணைக்கண்டத்தின் பிரதமராகவும் இருக்கிறார். எனவே சீனாவில் கண்டவற்றைப்பற்றி பேசுவதுடன் மட்டும் இருந்துவிடாமல், அந்த மாறுதல்களை இந்தியாவில் கொண்டுவருவதற்கு அவர் எந்த அளவு பாடுபடுவார் என்று தெரியவில்லை.

இந்தியா விடுதலைபெற்றபின் தான், சீனாவில் புதிய ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்தது. நேருவுக்கு கிடைத்த வசதிகளைவிட மிகக் குறைவாகவே மாசேதுங்கிற்கு இருந்தன. இந்தியாவில் ஆட்சி கைமாறியது, அமைதியான முறையில். சீனாவில் பலத்த உள்நாட்டுச் சண்டைக்குப் பின் ஆட்சி கைப்பற்றப்பட்டது. தொழில் வளர்ச்சியில், பொருளாதாரத் துறையில், சீனா இந்தியாவைவிட அரை நூற்றாண்டு பின்னதாக இருந்தது. இந்தியாவில் இருந்ததைவிட, அதிக அளவு பட்டினியும், பஞ்சமும் பழைய சீனாவில் இருந்தன. ஆனால் புதிய சீனா உருவாகி நாலைந்து ஆண்டுகளுக்குள் பஞ்சத்தின் கொடுமை ஒழிக்கப்பட்டு, பட்டினிபோடும் நிலைமாறி, இன்று இந்தியாவைவிட ஓரடி முன்னால் நிற்கும் நிலையை சீனா அடைந்துள்ளது. அதைவிட முன்னணியில் இருந்த இந்தியா, அதிக வசதிகளையும், வாய்ப்புகளையும் பெற்றிருந்துங்கூட குறிப்பிடத்தக்க வளர்ச்சி எதுவையும் காட்டமுடியவில்லை.

வேலையில்லாத் திண்டாட்டம், பஞ்சம், பட்டினி முதலியவை புதிய சீனாவில் படிப்படியாகக் குறைக்கப்பட்டுள்ளன; இந்தியாவில் அவை வளர்ந்துகொண்டே போகின்றன.

சீனாவில், புதிய ஆட்சி மலர்வதற்குமுன், அரசியல் நிர்வாகம் மிக ஊழல்மயமாக இருந்ததாம், சியாங்கின் ஆட்சி பீடத்தைக் கவிழ்த்ததற்கு முதல் காரணமாயிருந்தது, பொறுக்கமுடியாத ஊழல் முறையாம். மாசேதுங் ஆட்சிக்கு வந்ததும், அந்த ஊழல்முறை இருக்குமிடம் தெரியாமல் அகற்றப்பட்டது. நேர்மையான அரசாங்கம் அமைந்ததும், திட்டங்களும் ஒழுங்காக நிறைவேற்றப்படுகின்றன. ஆனால் இந்தியாவைப் பார்த்தால் அதற்கு நேர்மாறான நிலை உண்டாகியிருக்கிறது. வெள்ளைக்காரன் காலத்திலிருந்ததைவிட, நேரு சர்க்கார் ஆட்சியில், வேறு எந்தவகையிலும் அரசாங்க நிர்வாகம் முன்னேறவில்லையென்றாலும், ஊழல்துறை ஒன்றில் மட்டும் அபரிமிதமான வளர்ச்சியடைந்திருக்கிறது. மத்திய சர்க்கார் போட்ட திட்டங்கள், அவற்றில் கொட்டப்பட்ட பணம், நடத்தப்பட்ட வியாபாரப் பேச்சுகள், உர பேரங்கள் இவைகளில் பெரும் அளவுக்குப் பணம் ஊழலால் மறைக்கப்பட்டிருக்கிறது. சர்வம் ஊழல் மயம் என்ற நிலை, நேரு சர்க்காரில் ஏற்பட்டுவிட்டது. சீனாவில் தான் கண்ட மாறுதல்களை நேரு உணர்வது உண்மையானால், அந்த மாறுதல்கள் —முன்னேற்றங்கள் இந்தியாவிலும் வரவேண்டும் என அவர் விரும்புவது உண்மையானால், முதலில் ஊழல் மிகுந்த நிர்வாகத்தை மாற்றி, நேர்மையான நிர்வாகத்தை அமைக்க அவர் முயலவேண்டும். அதுவரை ஐந்தாண்டு, பத்தாண்டு திட்டங்கள் எவ்வளவு போட்டாலும், அவையெல்லாம், ஓட்டையுள்ள தொட்டியில் ஊற்றப்பட்ட தண்ணீரைப்போல எதுவும் மிஞ்சாது. உழைப்பு வீணாவதுடன், கோரிய பலனும் கிடைக்காது.

ஊழல் மயமான நிர்வாகத்தை அகற்றுவதுதான் நேரு பண்டிதருக்குச் சீனா தரும் முக்கியச் செய்தியாக இருக்கமுடியும். ஊழல் நிர்வாகத்தை அகற்றுவதே நாட்டுவளர்ச்சிக்கு வழியமைக்கப்படும் முதல் வேலையுமாகும்.

## ஆச்சாரியார் அறிவிப்பு

"மதத்துவேஷிகளுக்கு இங்கு இடமில்லை."

இவ்வாறு ஆச்சாரியார் அவர்கள் சௌகார் பேட்டையில் வடநாட்டுக்காரர்களின் கூட்டத்தில் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

மந்திரி பதவியிலிருந்து விரட்டப்பட்டபின், ஆச்சாரியார் பக்திமார்க்கத்தையும், பஜனை கூடத்தையும் நம்பி உலவிவருவது எல்லோருக்கும் தெரிந்ததே. வலுவற்ற நிலையில், கைகால்கள் பலவீனமடைந்து தனது இரையைப் பிடிக்க முடியாத நிலையில், புலியொன்று விபூதியணிந்து, உருத்திராட்சம், கமண்டலத்துடன் காட்சியளித்து, "கொலைத்தொழில் புரிவது பாவம்; பக்தி மார்க்கமே சிறந்தது!" என்று பேசி, அதை நம்பி அருகில் வருவோர்க்கு முக்திநிலை தந்துகொண்டிருந்ததாகக் கதையொன்று கூறுவார்கள். அதைப்போல, பல ஆண்டுகள் அரசியல் அதிகாரங்களை வகித்து, எதேச்சாதிகாரப்போக்கில், ஈவு இரக்கமற்ற தன்மையில், பல்லாயிரவரைச் சிறையில் தள்ளி, தடியடி தர்பார்களை நடத்தி, எலும்பு முறிய, சதை அகல, இரத்தம் ஒழுக, பலருடைய மண்டைகளை உடைத்து, சில பிணங்களை மண்ணிலே விழச்செய்து, நாட்டை அலங்கோலப்படுத்தி, பின் பொது மக்கள் வெறுப்பால் அதிகாரத்தை விட்டு வெளியேற்றப்பட்ட நிலையில், ஆச்சாரியார் பஜனைக் கோலத்துடன், மதப்பிரசங்கங்களை செய்துகொண்டு, "மதத்துக்கு வந்துள்ள ஆபத்தை" நீக்க முயலும் மகானுபவராகக் காட்சியளிக்கிறார். இருந்தாலும், அதிகாரம் இருந்தபொழுது அவருக்கிருந்த ஆணவப் பேச்சு இன்னும் போகவில்லை. "மதத்துவேஷிகளுக்குச் சென்னையில் இடம் கிடையாது!" என்று திட்டவட்டமாக ஆச்சாரியார் அறிவித்துள்ளார்.

யார் மதத்துவேஷிகள்? மதம் என்றால் என்ன? உண்மையான நெறி என்றால் என்ன? ஆகும் நெறி எது, ஆகா நெறி எது? ஆச்சாரியார் இந்தச் சிக்கல் நிறைந்த கேள்விகளைச் சிந்தனையில் வைத்துக்கொள்ளவில்லை, "மதத்துவேஷிகளுக்கு இடமில்லை" என்று இறுமாப்புடன் பேசியபொழுது.

உண்மையில் மதத்துக்கு துவேஷம் உண்டாக்குபவர்கள், மதத்திலே இருப்பவர்கள் தான்! காவியுடையணிந்த காமாந்தகாரர்கள், கமண்டலமேந்திய கள்ள நினைவினர், தாம் செய்த பாவங்களைத் திருநீறுபூசி மறைக்க முயலுபவர்கள், கொள்ளையடித்த பொருளை வைத்துக் கும்பாபிஷேகம் செய்பவர்கள், கொலை செய்துவிட்டு, கோயிலிலே தங்கமாலை சாத்துபவன், இவர்களனைவரும் மதப்போர்வையில், மதப் பாதுகாப்பின் கீழ் வாழ்கின்றனர்; நாட்டை வதைக்கின்றனர்; மதத்தின் மீது துவேஷத்தை வளர்க்கின்றனர். உண்மையில் அவர்கள்தாம் முதல்தர மதத்துவேஷிகள்!

மதத்தைக் காட்டி, மத ஏடுகளைக்காட்டி, மனு மாந்தாதா சாஸ்திரங்களைக்காட்டி, உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்று சமுதாயத்தைக் கூறுபோடுகிறார்களே அவர்கள் மதத்தின்மீது துவேஷத்தைக் கிளப்புகிறார்கள்!

மதத்தின் பேரைச்சொல்லி, முப்புரி நூலைக் காட்டி, உழைக்காது வாழும் வகையை செய்துகொண்ட பிரம்ம சொரூபங்கள் மதத்தின்மீது துவேஷத்தைப் பரப்புகிறார்கள்!

மதத்தின் பேரைச் சொல்லி, கோதானம் பெறுபவர்கள், சதுர்வேதிமங்கலங்களைச் சாசனமாக்கிக்கொண்டவர்கள், கோயில் மண்டபங்களைத் தமது கூடாரங்களாகக் கொண்டவர்கள், இவர்கள் மதத்தின்மீது துவேஷத்தைப் பரப்புகிறார்கள்!

மதத்தின் பேரைச்சொல்லி வாழும் மடாதிபதிகள், தம்பிரான்கள், சங்கராச்சாரியார்கள், ஜீயர்கள், அசையாத மேனியர்கள், வாடாத வாழ்வினர்கள், இவர்களே மதத்தின்மீது மக்களின் துவேஷம் பரவக்காரணமாகயிருந்தவர்கள்!

மதத்தின்பேரால் நடக்கும் அநீதிகள், மடாலயங்களில் நடைபெறும் அக்கிரமங்கள், கோயில்களில் நடக்கும் திருட்டு புரட்டுகள், இவைகளே மதத்தின் துவேஷங்களாக ஆயின.

மதத்திற்கு ஆபத்து, மதத்துவேஷிகளை அகற்றவேண்டும் என்று ஆச்சாரியார் நினைப்பாரானால், முதலில் காவியுடைக் கள்ளர்கள், கழுகொத்த பூசுரர்கள், விபூதியணியும் வேடதாரிகள், பாபத்தை மறைக்கும் பக்தி பூச்சுகள், கோயிற் பெருச்சாளிகள், இவர்களை முதலில் நாட்டைவிட்டு அகற்ற முயலவேண்டும்.

மதத்திற்கு ஏற்பட்ட துவேஷத்தின் காரணம் வெளியிலிருந்து வந்ததல்ல; மதத்திலேயே இருக்கிறது, மதத்தில் இருப்பவர்களாலேயே செய்யப்படுகிறது. மோசடிகளை நாம் எடுத்துக்காட்டுகிறோம். துவேஷத்தைஅகற்ற

வேண்டுமானால், பேராசானடிகளை முதலில் அகற்றவேண்டும்.

ஆச்சாரியார் அந்த அரிய செயலுக்குத் தயாராயிருப்பாரா? ஒருவேளை வெளியேற வேண்டியவர்கள் பட்டியலில் தானும் இடம் பெற்றுவிடுவோமோ என்ற அச்சம் அவருக்கு உண்டானாலும் உண்டாகலாம்!

ஃ ஃ ஃ

## நாடக விழாவாம்!

தமிழ்நாட்டில் தலைசிறந்தனவாகக் "கருதப் படும்" நாடகங்கள் தமிழ்ப் பிரதேச நாடகவிழா வில் நடித்துக்காட்டப்பட்டனவாம்!

"தமிழ் நாடகவிழா! தலைசிறந்த நாடகங் களைப் பொறுக்கியெடுக்கும் மகத்தான நாடக விழா! நமக்குத் தெரியாமல் போய்விட்டதே!" என்று கேட்பீர்கள்.

"யாருக்கும் தெரியாமல்—தெரியவேண்டா மென்றுதான் அது நடத்தப்பட்டிருக்கின் றனர்."

"யாரார் நடித்தார்கள்?"

பெயர்களைச் சொல்லுகிறோம் குறித்துக் கொள்ளுங்கள்,

நகைச்சுவையரசர் என். எஸ். கே, டி. ஏ. மதுரம் குழுவினர்.

முத்தமிழ் கலா வித்துவரத்தின டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகக் குழுவினர்.

நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி நாடகக் கூட்டத்தினர்,

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் நடிகர் குழு.

சிவாஜி கணேசன், சகஸ்ரநாமம் நாடகக் குழுவினர்.

கே. சாரங்கபாணி, எம். என். நம்பியார், எஸ். டி. சுந்தரம் நாடகக்குழு.

நடிகவேள் எம். ஆர். ராதா நடிகர் குழு வினர்.

எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயண சாமி நாடக மன்றத்தினர்."

"இவர்களனைவரும் இருந்தால் போதுமே, நாடகவிழா வெற்றியடைந்திருக்குமே!"

"அவசரப்படாதீர்கள்! மேலே குறிப்பிட்ட வர்களெல்லாம் நாடக விழாவில் கலந்து கொள்ளாதவர்கள். கலந்துகொண்டவர்கள் பெயர்களைச் சொன்னால் உங்களுக்கு யாரென்றே தெரியாது. எனவே கலந்து கொள்ளாதவர்கள் பெயரைச் சொன்னோம், மேலும் மேலே குறிப்பிட்ட புகழ்பெற்ற நடிகர் களை வைத்து நாடகங்களை நடத்தினால், நாடக விழா பெருமித வெற்றியடைந்து, நாடகக் கொட்டகை போதாது மக்கள் கூட்டம் கூ தொந்தரவு செய்துவிடுவார்களோ என் அச்சப்பட்டு, நாடகவிழாவை நடத்தியவர்க எந்த நாடகக் குழுவினர் நடத்தினால் மக்க கூடிவிடுவார்களோ, அவர்களையெல்லா கண்டிப்பாக விலக்கிவிட்டு, புது நடிகர் குழு களைக் கொண்டு நடத்தினார்கள். அண்ணா மன்றம் நிம்மதியாக இருந்தது, நாடகவிழ அமைதியாக, சந்தடியெதுவுமின்றி நடந்தது.

* * *

சென்னையில் தமிழ் நாடகவிழா ஒன் நடந்தது; தமிழ்நாட்டின் தலைசிறந்த நாடக களைப் பொறுக்கியெடுக்க நடத்தப்பட்டதா ஆனால் அந்த விழாவில், தமிழ்நாட்டின் க னத்தைக் கவர்ந்த நாடகங்கள், புகழ்வாய்ந் நடிகர்கள் காணப்படவில்லை. கலந்துகொள் வாய்ப்புத் தரப்படவில்லை.

தமிழ் நாட்டில், நாடகக்கலையின் முக்கி அமைப்பாக இருப்பது, தமிழ் நாடகக்கழ மாகும். தமிழ் நாடகவிழாவை, அந்த நாடக கழகத்திடம் ஒப்படைப்பதுதான் நேர்மையு பொறுப்புமான செயலாகும். ஆனால் டில்லி யில் முளைத்துள்ள நாடக அமைப்பு ஒன் தான்தோன்றித்தனமான முறையில் விழாவை நடத்த முற்பட்டதுடன், தமிழ்நாட்டின் தலை சிறந்த நடிகர்களையும், நாடகக் குழுவினர்களை யும் அவமதிக்கும் முறையில் காரியங்களை செய்திருக்கிறது.

தமிழ் நாடக விழா! அதில் நாடகக் கழக புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்ப் பண்பை விளக்கிடும் நாடகங்கள் ஒதுக்கப்பட்டுவிட்டன முதலில் குறிப்பிட்ட என். எஸ். கே, டி. கே. எஸ், போன்ற தமிழ் நடிகர்கள் கலந்துகொ ளாத விழாவுக்கு தமிழ் நாடகவிழா, என் ஏன் பெயரிடவேண்டும்? அதற்கு தியேட்ட சென்டர் நாடகவிழா, திண்டாட்டத்தின் நாடகவிழா, ஏதாவது ஒரு பெயரைச் சூட்டி கொள்ளவேண்டும். ஒற்றைக்கண்ணுடைய னுக்குக் கமலக்கண்ணன் என்று பெயரிடுவது போல, தமிழ் நாடகங்கள், தமிழ் நடிகர்கள் இல்லாததற்கு தமிழ் நாடகவிழா என்றபெய

இந்தப் போலி விழாவில் கலந்துகொள் மறுத்து, தன்மானத்தைக் காக்கப் போராடி தமிழ் நடிகர்கள் நமது பாராட்டுதலுக்குரியவ களாவார்கள்.

தமிழ் நாடகவிழாவில், ஒருவகையில் நடி புக்கலை முன்னேறியிருக்கிறது. தமிழ் நாட விழா என்று கூறி, ஒரு நாடகவிழாவை நடி துக்காட்டிவிட்டார்கள்! அது ஆச்சரிய படத்தக்க நடிப்புதான்!

# கோசலநாட்டு வண்டுகள்

[ இரா செழியன் ]

சக்ரவர்த்தித் திருமகனும் ஸ்ரீராமச்சந்திரர், அரண்மனை வாழ்வை விட்டு நீங்கி, அருமை மனைவியை விட்டுப் பிரிந்து, ஆரண்ய வாசத்தில் சோகத்தால் திரிந்தபொழுது, வாயுவின் குமாரர் அனுமான் எதிர்ப்பட்டு, அவருக்குத் துணையானாராம். அதுவரைத் தனது பலம் தெரியாதிருந்த அநுமானுக்குப் பின் ஆற்றலும் வலிவும் தோன்றியதாம். அதைப்போல, அரசியல் வாழ்வை விட்டு, அருமைப் பதவியைவிட்டுப் பிரிந்து, ஆரண்யவாசத்தில் இருக்கும் சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியாருக்குத் துணையாக, கிருபானந்தவாரியார் சென்றிருக்கிறார்.

ஸ்ரீராமமூர்த்திக்குப் பக்கத்தில் ஒரு வானர மூர்த்தி நின்றதைப்போல, ஆச்சாரியாருக்குப் பக்கத்தில் வாரியார் நின்றிருக்கிறார். ஆச்சாரியாரின் முதல் நம்பர் எதிரிகள்மீது தம் சொல்லம்புகளை வீசியிருக்கிறார். வாயுகுமாரனும் ஒரு வாய்வீரன்—"சொல்லின் செல்வன்" என்று பெயர்பெற்றவன். நமது வாரியாரும் "பிரசங்கபூஷணம்" எனப் பெயர்பெற்றவர்.

கச்சாலேஸ்வரர் கோயிலுக்கருகில் ஆச்சாரியார் தலைமையில், இராமாயணப் பிரசங்கம் செய்த கிருபானந்தவாரியார், கோசலநாட்டு வண்டுகளைப் புகழ்ந்து சொல்லும்பொழுது; இங்குள்ள "கருவண்டு"களைப்பற்றி குறிப்பிட்டாராம். இராமாயணத்தைப்பற்றி எதிர்ப்பு மூண்டபொழுது, இதைப்போல பலப்பல வசவுச்சொற்கள் வீசப்பட்டுள்ளன. "கலை புணர்வறியாக் கசடர்கள்!" "செவிச்சுவை புணரா மாக்கள்!" எனப் பழிமொழிகள் பலபகுத்தறிவியக்கத்தினரைத் தாக்கின. அப்பொழுதெல்லாம் இராமாயணத்தை "தெய்வ மாக்காதை"யாக ஏற்றுக்கொள்ள மறுப்போர் மீது, இராமாயண ரசிகர்களும், இராமபக்தர்களும் கொள்ளும் ஆத்திரத்தின் அளவுதான் தெரிந்தது. அதையன்றி மறுப்போர் கூறும் காரணங்களுக்குத் தகுந்த பதில்கள் தரப்படவில்லை.

அவர்களுடைய கோபக்கனலில், வெறுப்பின் புகை எழுந்ததேயன்றி, அறிவின் ஒளி வீசவில்லை. அவ்வாறு வீசப்பட்ட பழிச்சொற்களில் "கருவண்டு" என்ற சொல்லையும் சேர்த்திருக்கிறார், இந்தப் "பொன்னிற மேனியர்" கிருபானந்தவாரியார்.

"கோசலநாட்டு வண்டுகள் மலருக்கு மலர் தாவுவதில்லை; ஒரு மலரிலேயே தேன் மொண்டு மகிழும்! இதை இந்தக் கருவண்டுகள் அறியமாட்டார்கள்!" என்று பொருள்படப் பேசினாராம் பிரசங்க விபீஷணர்—இல்லைத் தவறிவந்துவிட்டது, பிரசங்க பூஷணர், கிருபானந்த வாரியார்.

மற்ற நாட்டு வண்டுகள் மலருக்கு மலர் தாவுவது வழக்கம். வண்டுகளின் இயல்பும் அதுவே! ஆனால் ஐயன் அவதரித்த கோசல நாடு மற்ற நாடுகளைப் போன்றதல்லவாம்! ஒரு வண்டு ஒரு மலரை மட்டும் சுவைத்து விட்டுப் பேசாமலிருந்துவிடுமாம்! இதனால் கோசலநாட்டு மலர்களில் தேன் மிகுதியாயிருப்பதைக்காட்டி, அதிலிருந்து கோசலநாட்டின் வளப்பத்தையும் தெரிவிப்பதாக இருக்கிறதாம். அதுமட்டுமல்ல, அந்நாட்டு ஆடவர்களும் ஒழுக்கசீலர்களாக, "மலருக்கு மலர் தாவாத" மாண்பினராக, இருந்தார்கள் என்பதையும் குறிப்பிடுகிறது! ஏகபத்தினி விரதம் பூண்ட இராமபிரான் அவதரித்த நாடல்லவா, அங்கே வண்டுகள் மலருக்கு மலர் தாவுவதில்லை; ஆடவர்கள் மனம்போன போக்கில், திரிவதில்லை. கோசலநாட்டின் இந்த உயர்தன்மையை உணராதவர்களைக் "கருவண்டுகள்" என்று வாரியார் பரிகசிக்கிறார்.

தமது இராமாயணப் பிரசங்கத்தில், கோசல நாட்டுப் பெருமையைப் பற்றிப் பேசும்

பொழுது, கிருபானந்தவாரியார் " மலருக்கு மலர் தாவாத வண்டுகளைப் " பற்றி பேசியிருக்கிறார். இந்தக்கருத்தமைந்த பாடல் கம்ப இராமாயணத்தில் எந்த இடத்தில் வருகிறது என்று நமக்குத் தெரியவில்லை. கம்ப இராமாயணம் பாலகாண்டத்தில், கோசலநாட்டுப் பெருமையைப்பற்றி 61 பாடல்கள் இருக்கின்றன. அந்த 61 பாடல்களில் வாரியார் கூறுகிற " அபூர்வ வண்டுகளைப் " பற்றிய பாடல் காணப்படவில்லை. நாட்டுப்படலத்துக்கு அடுத் தபடியாக, நகரப்படலம்— அதாவது அயோத்திநகரச் சிறப்பைக் கூறும் படலம் இருக்கிறது. அதில் 75 பாடல்கள் இருக்கின்றன. அந்த 75 பாடல்களிலும் கிருபானந்த வாரியார் வர்ணிக்கிற 'வண்டுகள்' காணப்படவில்லை. வாரியார் வேறு எந்தப் படலத்தில், எந்த இராமாயணத்தில், அந்த அரிய வண்டுகளைத் தேடிப்பிடித்துவந்தாரோ நமக்குத் தெரியாது!

கம்ப இராமாயணத்தில், கோசலநாட்டுப் பெருமையைப்பற்றிக் குறிப்பிடும் பாடல்களில் " மலருக்கு மலர் தாவாத வண்டு" களைப்பற்றி எதுவும் கூறப்படவில்லை. மாறாக மலருக்கு மலர் தாவி, தேனை நுகர்ந்துவரும் வண்டுகளைப்பற்றிய வர்ணனை கம்ப இராமாயணத்தில் இருக்கிறது. பாலகாண்டத்தில், கோசல நாட்டின் வளத்தைப்பற்றிக் கூறிடும் "நாட்டுப்படலம்" 21-வது பாடலில், வண்டுகளையும் உழவர்களையும் ஒப்புமைப்படுத்திக் காட்டி கம்பர் பாடியிருக்கிறார். அந்தப் பாடல் பின் வருமாறு :

**கதிர்படு வயலி னுள்ள கடிகமழ் பொழிலி னுள்ள**
**முதிர்பல மரத்தி னுள்ள முதிரைகள் புறவி னுள்ள**
**பதிபடு கொடியி னுள்ள படிவளர் குழியி னுள்ள**
**மதுவள மலரிற் கொள்ளும் வண்டென மள்ளர் கொள்வார்.**

இதன் பொருள் என்னவென்றால், "கதிர் விளையும் வயல்களிலும், நறுமணம் வீசுகிற பொழில்களிலும், முதிர்ந்த மரங்களிலும், தானியங்கள் விளையும் கொல்லைகளிலும், பதிக்கப்பட்ட கொடிகளிலும், குழிகளில் வளர்கிற செடிகளிலும், இவ்வாறு எங்கெங்கு தேன் கிடைக்கும் வகைகளிருக்கிறதோ, அங்கெல்லாம் சென்று வண்டு தேனைக் கொள்ளுவதைப்போல பலவிடங்களிலும்தேடி உழவர் பலனைச் சேகரிக்கிறார்கள் " என்பதாகும்.

பயன்தரும் இடங்களை வண்டுக்கும், உழவருக்கும் பொதுவாகக் கம்பர் வைத்துள்ளார். வண்டுகளுக்குக்கூறப்பட்ட இடங்களை உழவர்களுக்குக் கூறும்பொழுது, "கதிர் விளைகிற வயிலுள்ள தானியங்களையும், நறுமணம் வீசும் பொழிலிலுள்ள முதிர்ந்த மரங்கள் தரும் பழங்களையும், கொல்லையில் விளைகிற துவரை முதலிய பருப்பு வகைகளையும், பூமியில் பதிக்கப்பட்ட கொடியிலுண்டாகும் பொருள்களையும், குழிதோண்டிப் பெயர்த்தெடுக்கிற மஞ்சள், இஞ்சி போன்ற பொருள்களையும், உழவர்கள் தமது உழைப்பால் எடுத்துவருகின்றனர்" என்று பொருள்கொள்ளவேண்டும்.

இந்தப் பாட்டுக்கு உரையெழுதிய, வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் அவர்களும் "வண்டுகள் மலர்களிடத்துஞ் சென்று தேனைக் கொணர்ந்து ஓரிடத்தில் சேர்ப்பதுபோல, மள்ளர் எல்லாவிடத்துஞ் சென்று அவ்வவ்விடத்துப் பொருள்களை அந்நாட்டிற் சேர்ப்பரென்பதாகும்" என்று கூறியுள்ளார். (மள்ளர் என்றால் உழவர் என்று பொருள்).

கிருபானந்தவாரியார் கூறுவதைப்போல, கோசலநாட்டு வண்டு ஒரு மலரைமட்டும் விரும்பி நின்றுவிடவில்லை. பல மலர்களுக்கும் சென்று மதுவைக் குடித்திருக்கின்றன. மற்ற நாட்டு வண்டுகளாவது, ஒரு சோலைக்குள் சுழன்று மலர்களைக் குடைந்துவரும். கோசல நாட்டு வண்டு இன்னும் பொல்லாததாக இருந்திருக்கிறது. அது கதிர்படு வயலைச் சுற்றுகிறது; அங்கிருந்து மணம் வீசும் பொழிலுக்குத் தாவுகிறது ; அங்குள்ள மலர்களை வேட்டையாடியதும், பழங்கள் கனிந்து தேன் சொட்டும் மரங்களுக்குப் போகிறது ; அங்கிருந்து கொடிகள் சூழ்ந்த கொல்லைக்கு, செடிகள் வளரும் பாத்திகளுக்குச் செல்லுகிறது. எங்கெல்லாம் "மதுவள மலர்கள்"—அதாவது தேனாகிய கள் மிகுந்திருக்கும் மலர்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் சேல்லுகிறது.

" கோசலநாட்டு வண்டுகள் மலருக்கு மலர் தாவுவதில்லை, அந்தப் பெருமையை இந்தக் கருவண்டுகள் உணரவில்லை !" என்று கிருபானந்தவாரியார் ஆரவாரித்தார். ஆனால் கம்பர்

பாட்டில் "கோசலநாட்டு வண்டு, மலருக்கு மலர் மட்டுமல்ல, சோலைக்குச் சோலை, பொழிலுக்குப் பொழில், கழனிக்குக் கழனி, கொல்லைக்குக் கொல்லை தாவுவதாக இருக்கிறது." கோசல நாட்டு வண்டின் பெருமையைச் சரியாகத் தெரிந்துகொள்ளாத 'கருவண்டு' யார் என்பது நமக்குப் புரியவில்லை,

வண்டுகளுக்குப் புதியதொரு 'கற்புத்தன்மையை' வாரியார் கற்பனை செய்கிறாரே, அது கோசலநாட்டு வண்டுகளிடம் நிச்சயமாக இல்லை. அதுபோகட்டும். கோசலநாட்டின் தலைநகரான அயோத்தியில்தான் ஸ்ரீராமர் அவதரித்தார்; ஏகபத்தினி விரதம் பூண்ட எம்பெருமான் அவதாரம் செய்த நகரிலாவது, வண்டுகள் வாரியார்கூறுகிற 'கற்பு நிலையை'க் காத்தனவா?

கம்ப இராமாயணம், பாலகாண்டம் நகரப் படலம் அயோத்தி நகரைப் பற்றிச் சிறப்பித்துச்சொல்வது. அந்த நகரப்படலத்தில் 47 வது பாடலைப் பார்க்கலாம்.

**பொழிவன சோலைகள் புதிய தேன்சில**
**விழைவன தென்றலு மிஞிறு மெல்லென**
**நுழைவன வன்னவை நுழைய நோவொடு**
**குழைவன தணந்தவர் கோதிக்குங் கொங்கையே!**

அயோத்தி நகரிலுள்ள பொழிலைப்பற்றி கம்பர் இந்தப் பாட்டில் கூறுகிறார். சில சோலைகள் தேன்பொழிகின்றன. தேனை நாடி, வண்டு ஒன்று வருகிறது. (மிஞிறு என்றால் வண்டு என்று பொருள்.) அந்த வண்டு மலருக்கு மலர் மிக மெதுவாகச் செல்லுகிறது. அப்படிச் செல்வது வண்டு மாத்திரமல்ல, தென்றலும் அவ்வாறு செல்லுகிறது. சோலையினுள் வண்டு நுழையும்பொழுதே, தென்றலும் நுழைந்துவிடுகிறது. இரண்டும் "மெல்லென நுழைவன" என்று கம்பர் கூறுகிறார். வண்டைப்போலவே, தென்றலும் மலர்களை மோந்து, அசைத்து, தேனை வாரிக்கொண்டு வருகிறது. சோலையை விட்டு, வெளிவரும் பொழுது, வண்டிடத்து தேன் மணங்கமழ்கிறது; தென்றலிடத்தும் தேன் மணங்கமழ்கிறது. தேனுண்டதால் வண்டு மயங்கி, மெதுவாகச் செல்கிறது; தென்றலும் மயங்கி, மெதுவாகச் செல்கிறது.

பொழிலின் வளத்தைக் கூறவந்த கம்பர் அங்கு வரும் வண்டை 'மலருக்குமலர் தாவாத' வண்டாகச்சித்தரிக்கவில்லை. தென்றலும், வண்டும் சோலைக்குள் நுழைகின்றன, அங்கிருக்கும் மலர்களின் தேனையெல்லாம் சூறையாடுகின்றன என்று காட்டுகின்றார்.

வாரியார் கூறுகிற "வண்டு" கோசலநாட்டிலோ, அயோத்திநகரிலோ இருந்ததாகத் தெரியவில்லை.

மேலே குறிப்பிட்ட நகரப்படலம் 47 வது பாடலில், முதல் மூன்று அடிகளில் தேன் பொழிலில் தென்றலும் வண்டும் மெல்லென நுழையும் காட்சியை விவரித்த கம்பர், நான்காவது அடியில் தமது கவனத்தை வேறு பக்கம் திருப்பிவிட்டார். பொழிலில், தென்றலும், வண்டும் நுழைந்து, மலர்களை முகந்து, தேனையுண்டுசெல்லுகின்றன. இதைப்பார்த்த வண்ணம் சோலையில் உலவிவரும் மங்கையரின் நிலையைக் கம்பர் ஆராய்கிறார்.

மாலை வேளை! சோலையில் மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. தென்றல் நுழைகிறது, கொடிகளுடன் ஆடுகிறது, மலர்களை அசைக்கிறது, தேனை முகர்ந்து செல்கிறது. தென்றலுடன் வண்டும் வருகிறது. மலரை முத்தமிட்டுத், தேனைப் பருகுகிறது. இந்தக் காட்சி சோலையில் உலவும் மங்கையரின் உள்ளத்தில் அலைமோதச் செய்கிறது. வண்டைப்போல, இன்பத்தேன் பருக அவர்கள் மனம் விழைகிறது. விரகதாபம் மிஞ்ச, உடல் கொதிப்புறுகிறது. அதைக் கம்பர் விவரிக்கிறார் மிகுந்த ரசனையுடன்.

**"......................நோவொடு**
**குழைவன தணந்தவர் கோதிக்குங் கொங்கையே"**

தணந்தவர் என்றால் பிரிந்திருப்பவர் என்று பொருள். இங்கு, சோலையில் பக்கத்தில் ஆடவரின்றி தனியே உலவிடும் பெண்களைக் கம்பர் குறிப்பிடுகிறார். அவர்கள் தனியே இருப்பதால், மாலைவேளை, மலர்ச்சோலை, தென்றல், தேனுண்ணும் வண்டு இவைகளைப் பார்த்ததும், விரகதாபம் உண்டாகி, உடல் வெம்மையால் வருந்துகிறதாம். அதிலும் மார்பகம் கொதிக்கத் தொடங்கின—"தணந்தவர்

கொதிக்குங் கொங்கையே" என்று கம்பர் தெர்மாமீட்டரை வைத்து வெப்பத்தின் அளவைக் காட்டுகிறார். கடுமையான காமநோய், அதனால் கொதிக்கும் நிலை வந்துவிட்டது. முதல் மூன்று அடியில் பொழில், தேன், தென்றல், வண்டு என்று காட்டிவந்த கம்பர், நான்காவது அடியில் "கொதிக்குங் கொங்கை" பக்கம் தனது கவிதைக் காமிராவைத் திருப்பி மகிழ்கிறார்.

"மலருக்கு மலர் தாவாது" என்று கோசல நாட்டு வண்டுகளுக்குப் புதிய "கற்பு நிலையை" கிருபானந்தவாரியார் ஏன் கற்பனை செய்தார் என்று புரியவில்லை. ஆனால் கம்பர் பாடியுள்ள பாடல்களில், இயற்கையில் காணப்படும் தன்மையைத்தான் கோசலநாட்டு வண்டுகளுக்கும் உள்ளதாகக் கூறியுள்ளார். நாட்டுப்படலத்தில், வயல், பொழில், சோலை, கொல்லை, செடி, கொடி இவைகளைச் சுற்றி தேனுண்டுவரும் வண்டைப்பற்றி விவரித்துள்ளார். நகரப் படலத்தில், பொழில்களில், அன்றலர்ந்த மலர்களின் தேனை மெல்லென வந்து உண்ணும் வண்டைப்பற்றி பாடியுள்ளார். கிருபானந்த வாரியார் சொல்லுகிற கற்பனை கம்பர் அறியாதது. எனவே, கிருபானந்த வாரியார் கூறுகிற "கருவண்டுகள்" கூட்டத்தில் முதலிடம் தரவேண்டியது கம்பருக்குத்தான்.

"கோசலநாட்டு வண்டு மலருக்கு மலர் தாவாது, ஒரு மலரில் கிடைக்கும் தேனை மட்டும் அது உண்டு மகிழும்" என்று குறிப்பிடும்பொழுது, "கோசலநாட்டு ஆடவர்கள் திரியும் மனம் படைத்தவர்களல்ல, ஒரு பெண்ணை மட்டும் விரும்பி ஒழுக்கநிலை கெடாதவர்கள்" என்று வாரியார் கோசலநாட்டு மக்களை ஒழுக்கசீலர்களாக்க முயல்கிறார். கோசல நாட்டு மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை ஆராயுமுன், அந்த நாட்டு மன்னன் எப்படியிருந்தான் என்பதைப் பார்க்கலாம். மன்னன் எப்படியோ, அப்படியே நாடும் அமையும் என்று சொல்லுவார்கள்.

கோசல நாட்டு மன்னன் தசரதன்—அவனுக்கு மனைவிமார் அறுபதினாயிரம் பேர்கள்! ஒரே மலரில் மதுவுண்ணும் வண்டும், ஒரே பெண்ணிடம் இன்பந்தாய்க்கும் ஆடவனும் கோசலை நாட்டில் இருந்ததாக வாரியார் கனத்த குரலில் பேசினாரே, அந்தக் கோசலை நாட்டின் மன்னனாக இருந்தவனுக்கு, "மது வளர் மலர்கள்" ஒன்று இரண்டல்ல, அறுபதினாயிரம் (60000) இருந்திருக்கின்றன. ஒரு வண்டுவுக்கு வேண்டிய தேன், ஒரு மலரில் கிடைத்துவிடும் என்று வாரியார், மலரின் வளப்பத்தைக் குறிப்பிட்டாரே, அந்த அள[…] வளப்பமுடையவர்களாக கோசலை நாட்டு ம[…] கையர் இருக்கவில்லைபோலும். அதனால்தா[…] நாட்டு மன்னனுக்கு 60,000மனைவிகள்தேவை[…] பட்டிருக்கிறது. கணக்கு வைத்துப் பார்[…] தால், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மனை[…] யைச் சந்தித்து வருவதாக வைத்துக்கொ[…] டால், தசரதனுக்கு ஒரு மனைவியை முதலி[…] சந்தித்துவிட்டு, மீண்டும் சந்திக்க 164 ஆண்[…] 3 மாதம் 10 நாட்கள் ஆகும்! அதுவரை அ[…] மனைவியின் கதியென்ன? மன்னனாகிய வண்[…] மற்ற மலர்களிலுள்ள மதுவை ருசித்துவி[…] 164 ஆண்டுகளுக்கு அப்புறம்தான்வரும்[…] அதுவரை இந்த மலரில் உண்டான மது......

இன்னும் கம்ப இராமாயணத்திலிருந்து ப[…] பாடல்களை எடுத்துக்காட்ட முடியும், கோச[…] நாட்டு மக்கள் எப்படியிருந்தார்களென்பதற்[…] கோசலநாட்டு மகளிர் ஆட, அவர்தம் கடை[…] கண் வீச்சுப்பட்டு, வாலிபர்களின் நெஞ்சி[…] காமவேட்கை தாக்கியதெனவும்; பெண்களி[…] மறுவல் கண்டு காமுகர்க்கு வேட்கை பிறந்[…] தெனவும், பல பாடல்கள் கம்ப இராமாயண[…] திலிருந்து எடுத்துக்காட்டமுடியும். விரிவஞ்சி[…] அவைகளை விடுத்தனம்.

கிருபானந்த வாரியார் மிகப்பொருத்தமற்ற[…] அர்த்தமற்ற, கம்ப இராமாயணத்தில் காண[…] படாத கற்பனையைப் புகுத்தியுள்ளார் தமது[…] பிரசங்கத்தில். அது எங்கிருந்து எடுக்கப்ப[…] டதோ? ஆனால் கம்ப இராமாயணத்தில் அதற்கு மாறுபாடான கருத்து வந்திருக்[…] கிறது. இவ்வாறிருக்க, தவறான கற்பனை[…] யைப் பேசியதுடன், பகுத்தறிவியக்கத்தினை[…] "கருவண்டுகள்" எனத் தாக்கியுமிருக்கிறார்.

"பொன்னார் மேனியனை"ப்பற்றி பாடட்டும்; பொன்னாடை போர்த்திச் செல்லட்டும்; பொன் வண்டாகச் சுற்றிவந்து, காண்போர்க்கு "களிப்பாக" இருக்கட்டும்.

"துள்ளுமதன் கணை வேட்கையைப்"பற்றிப் பாடி உருகட்டும், கிடைத்தால் திருப்புகழ் அமிர்தம் பருகட்டும்.

அதைவிட்டு, நமது வாரியார் துள்ளி வரு[…] கிறார், ரீங்காரம் செய்துகொண்டு. "துள்ளி வராதீர், தள்ளிச் சென்றுவிடும்; அவசரப் படாதீர், ஆபத்தை அணைத்துக்கொள்வீர்" என்று எச்சரிக்கை செய்கிறோம், குகப்பிரியர் தமது குரலைச் சரிசெய்துகொள்வாரென்று நினைக்கிறோம். பிரசங்க பூஷணர், பின் சங்கட பூஷணமாகும் நிலை வந்துவிடும்.

[இரா. செழியன்]

கமலநாதன் குற்றவாளிக் கூண்டை பார்த்தான். அங்கு முதல் எதிரி சொக்கலிங்கமும், அவனுக்கு அடுத்தபடி இரண்டாவது எதிரி பாலாமணியும் நிற்பது தெரிந்தது. சொக்கலிங்கத்தின கொடூரப் பார்வை அவன் எந்தக் கொலைக்கும் அஞ்சாதவன் என்பதைக் காட்டியது. இரண்டாவதாக நின்ற பாலாமணி ஏதோ படிதாண்டா பத்தினிபோல நாணிக் கோணி நின்ருள். எல்லாம் பசப்பு! வெளி வேடம்! தருமலிங்கத்தைச் சொக்கலிங்கம் கொலை செய்ததைவிட, தருமலிங்கத்துக்குப் பாலாமணி செய்த வஞ்சகம்தான் கடுமையானதாகக் கமலநாதனுக்குப்பட்டது. கமலநாதன் ஜூரர்களைப் பார்த்துத் தனது வாதத்தை மீண்டும் தொடங்கினுன்.

"முதல் எதிரியின் கொடுவாள், தருமலிங்கத்தின் உடலைத் தாக்கி, உயிரைப் பிரித்திருக்கிறது. அதற்குமுன் அவன் செய்த கொடுமை—ஒழுக்கக்கேடு, தருமலிங்கத்தின் வீட்டைத் தாக்கி, அவனது இல்லறத்தைப் பிரித்துவிட்டது. தருமலிங்கம் முதலில் வஞ்சிக்கப்பட்டான், பிறகு கொலை செய்யப்பட்டான். நமது நாட்டில் எதை மிகப் புனிதமானது, தெய்வீகமானது என்று கருதுகிறோமோ, அந்தக் கற்பு—இல்லறத்தில் ஒரு மனைவியிடம் காணப்படவேண்டிய ஒழுக்க நிலை, இவர்களால் கால்தூசியாக மதிக்கப்பட்டிருக்கிறது, இல்லம் தாக்கப்பட்டிருக்கிறது, இல்லற வாழ்வு சிதைக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய ஒழுக்கக்கேடுகள், அதனுல் வரும் குற்றச்செயல்கள் இவைகளைச் சட்டமோ, சமூகமோ பொறுத்துக்கொண்டிருக்காது.

"இல்லறவாழ்வில் ஒழுக்கம் மிகப் புனிதமானது, நமது நாட்டில் மிக உயர்ந்ததாக, தெய்வீகமானதாகக் கருதப்படுவது. அந்தப் புனிதத் தன்மை அழிக்கப்பட்டால், இல்லறம் பாழாகிறது, குடும்பம் தாழ்கிறது, சமூகத்தின் கட்டுக்கோப்பு தளர்கிறது; மனித வாழ்வின் அடிப்படை அர்த்தமற்றதாகிறது. எனவே, இல்லறத்தைப் பாழ்படுத்துபவர்கள், சமூகத்தின் ஒழுக்க நிலையை மீறுபவர்கள், அதற்காகக் கொலை, களவு இவைகளுக்குத் தங்களைத் தயார்செய்து கொள்ளுகிறவர்கள்—இதோ! இந்தக் கூண்டில் நிற்கும் எதிரிகள்!

"வழக்கில் காட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளனைத்தும் சந்தேகத்துக்குத் துளியும் இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளன. கொலை செய்ததற்கான நோக்கம் தெளிவாகத் தெரிகிறது. கொலை செய்ததற்கும், கலகம் நடந்ததற்கும், அதற்கான வேலைகளுக்கும், மிக உறுதியான சாட்சியங்கள் கோர்ட்டார் முன் வைக்கப்பட்டுள்ளன. கி. பி. கோ. 147 செக்ஷன், 325-வது செக்ஷன் அத்துடன் 149 செக்ஷன் சேர்ந்து, 302 செக்ஷன் அத்துடன் 149 அல்லது 34 செக்ஷனைச் சேர்த்து—இந்தக் குற்றப்பத்திரிக்கையில் தரப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளனைத்தும் குறிப்பிட்ட எதிரிகள்மீது நிரூபிக்கப்பட்டுள்ளன. குற்றங்களின் கொடுமையை நன்குணர்ந்து, அவற்றுக்குச் சட்டத்தில் காணப்படும் கடும் தண்டனைகளைத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். வழக்கில் மிகத் திறமையுடன் சேவைசெய்த போலீசாருக்கும், குற்ற இலாகாவிற்கும் எனது நன்றியறிதலையும், பாராட்டுதலையும் தெரிவித்துவிட்டு இத்துடன் எனது வாதத்தை நான் முடித்துக்கொள்ளுகிறேன்."

கமலநாதன் தன்னிடத்தில் உட்கார்ந்தான். ஒருவாரம் தள்ளி, வழக்கின் தீர்ப்பு நாள் போடப்பட்டது. அத்துடன் கோர்ட் கலைந்தது. குற்றவாளிக்கூண்டிலிருந்து, எதிரிகள் ஒவ்வொருவராக நகர்ந்துகொண்டிருந்தனர். கமலநாதன் தன்னறைக்குச் சென்ருன்.

முகத்தைக் கழுவிக்கொண்டு கமலநாதன் உட்கார்ந்தான். வழக்கு முடிந்து, தன் வாதங்கள் முடிந்தபின்னும், வழக்கு விவரங்கள் அவன் மனதைச் சுற்றிக்கொண்டிருந்தன. சே! அவர்களால் எப்படி இவ்வளவு கடுமையான குற்றங்களைச் செய்ய முடிகிறது! கொலையுண்ட தருமலிங்கத்தைக் கைவிட்டு, பாலாமணி எதற்காக முதல் எதிரி சொக்கலிங்கத்தைக் கள்ளக்காதலனை ஆக்கிக்கொண்டாள் என்று அவனுக்குப் புரியவில்லை. சொக்கலிங்கத்தைப் பார்த்தால், அப்படியொன்றும் மன்மதரூபனை இல்லை, பாட்டைத்தலை, முரட்டு மீசை, தழும்புகள் முகம், கொடுமையான பார்வை! பாலாமணியும் அப்படியொன்றும் இளமங்கையல்ல! முப்பத்தைந்து வயதுக்குமேலாகிறது! வழக்கு விசாரிக்கும் பொழுது, இருவரும் அடுத்தடுத்து நிற்பதைப் பார்ப்பதற்கே கமலநாதனுக்குக் கண்கூசியது! உண்மையிலே காலங்கெட்டுத்தான் போகிறது. சமூகத்தில் ஒழுக்கக்கேடுகள், குற்றங்கள் மலிந்துகொண்டுபோகின்றன. சட்டத்தின் கண்டிப்பு சரியாக இல்லாவிட்டால், வாழ்க்கையில் எத்தகைய நீதியும், நேர்மையும் நிலைபெரு.

சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தபடி உட்கார்ந்திருந்த கமலநாதன், "ஓ! இந்த வழக்கில். இன்ருேடு என் வேலை முடிந்துவிட்டது, இனிமேல் அதைப்பற்றி ஏன் நினைக்கவேண்டும்?'' என்று எழுந்தான். அப்பொழுது கதவைத் திறந்துகொண்டு, அட்வகேட் அனந்தநாராயணன் வந்தார்.

"என்ன! மிஸ்டர் கமலநாதன்! இன்னும் கிளம்பவில்லையா?''

"கிளம்பிக்கொண்டுதானிருக்கிறேன்,''

"இரண்டாவது கோர்ட் பக்கம் வரும்பொழுது, நீங்கள் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தேன். தருமலிங்கம் கொலைவழக்குதானே?''

"ஆமாம்! இன்று வாதங்கள் முடிந்தன. அடுத்த செவ்வாய் 12-ந் தேதி தீர்ப்பு. நிச்சயம் தண்டித்துவிடுவார்கள்.''

"பத்திரிக்கையில் வேறு பத்திபத்தியாக வெளிவருகிறது. சரி! இப்பொழுது எங்கு போகப்போகிறீர்கள்? என்னுடைய கார் ரிப்பேர்! காலையில் கோவிந்தாச்சாரி காரில் வந்தேன். போகும்பொழுது வழியில் நான் இறங்கிக்கொள்கிறேன்.''

"எங்கு போகவேண்டும்?''

"பக்தஜனசபையில், இராமாயணப் பிரசங்கம் இருக்கிறது. ஜஸ்டிஸ் பீதாம்பரம் ஐயர் ஆத்துக்குப் பக்கத்தில்தான். பிரசங்கம் தமிழில்தான். நித்தியானந்த சாமிகள் அவர்தான் பிரசங்கம் செய்யப்போகிருர். நீங்களும் வருவதுதானே!''

"இல்லை! நிரம்ப அலுப்பாக இருக்கிறது. நான் உங்களை அங்கு இறக்கிவிட்டுப் போகிறேன்.''

"அப்படிச் சொல்லக்கூடாது, மிஸ்டர் கமலநாதன்! பொழுதுபோக்காக இருக்கும், நித்தியானந்த சுவாமிகள் பேசுகிருராம்! அவருடைய பேச்சைக் கேட்பதே காதுக்கு கானாமிர்தமாயிருக்கும். மேலும் மனதுக்கும் சந்துஷ்டியளிக்கும்.''

கமலநாதனும், அட்வகேட் அனந்தநாராயணனும் உள் நுழையும்பொழுது. நித்தியானந்தசாமிகள் பேசிக்கொண்டிருந்தார். பக்தஜனசபை மிகவும் நிறைந்து, வெளியிலும் பலர் நின்றுகொண்டிருந்தனர். சுற்றிலும் கார்கள் வரிசை வரிசையாக நின்றுகொண்டிருந்தன. உள்ளே, பக்தர்கள் கூட்டம்; ஜரிகை தலைப்பாகைகள், பட்டு பீதாம்பரங்கள், பொன் மூக்குக்கண்ணாடிகள் மின்னிட நித்தியானந்தசாமிகளின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தது. கமலநாதன், உள்ளேபோய் உட்காராமல் காருக்குப் பக்கத்தில் நின்று கேட்டுக்கொண்டிருந்தான். மேடைமீது, நீற்றுப் பூச்சுடன், காவியுடையணிந்து, தாடியை உருவி விட்டுக்கொண்டு, யோகி நித்தியானந்தர் நிற்பது கமலநாதனுக்குத் தெரிந்தது. அவருடைய பேச்சில் கனிவும், பக்தியின் அருளும் இருந்தன.

"மனிதனுக்கு ஒழுக்கத்தில் எப்பொழுது கேடு வருகிறதோ, அப்பொழுது அவன் பலமற்றவனுகிருன். அவன் மற்றவகைகளில் எவ்வளவு திறமைசாலியாகயிருந்தாலும், பாபாக்கிரமமான செயலைச் செய்யத்தொடங்கியதும், அவனுடைய வீழ்ச்சி ஆரம்பிக்கிறது'' கனீரென்ற குரலில் யோகியார் பேசுவது கேட்டது. கோர்ட்டில் குற்றவாளிகளைப் பார்த்து—அதிலும் அன்றைய கொலைவழக்கை முடித்துவிட்டு வந்த கமலநாதனுக்கு இந்தச் சொற்கள், காதுக்கும், கருத்துக்கும் இனிமையாக இருந்தன. மக்களுக்கு இதைப்போல, நல்லுரைகளை எடுத்துச் சொன்னுல்; பலரைத் திருத்தலாம் என்று கமலநாதன் நினைத்தான். மறுபடியும் பிரசங்கியாரின் குரல் வந்தது.

"இப்பூவுலகின்கண், ஆன்மாவைப் பாபக்

ருத்தியங்களுக்கு அழைத்துச்செல்லுவதில் க்கியமானவைகளாக இருப்பது மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை. உலகத்தில் நடக் ம் மகா யுத்தங்கள் எதனால்? மண்ணாசை ால்! நாட்டில் களவு, கொள்ளை, திருட்டு, ரட்டுகள் போன்ற அதர்மங்கள் நடப்பது தனால்? பொன்னாசையால்! ஆனால் இந்த ரண்டையும்விட மிகப் பொல்லாதது பெண் ணாசை பெண்ணாசையில் இந்திரன், சந்திரன். பான்ற தேவாதி தேவர்களே பங்கமடைந் ார்களென்றால், கேவலம் மானிட ஜன்மங் ளைப்பற்றிச் சொல்லவேண்டுமா? இதனால் ான் கம்பநாட்டாழ்வார், இந்த உலகத்துக் த் தூமகேதுவாகப் பெண்கள் வந்திருக்கிறார் ள்'' என்று சொல்கிறார். சாமியார் கொஞ் ம் பாலைக்குடித்து: கற்கண்டை மென்று தாண்டையைச் சரிசெய்துகொண்டு, பின் ண்ட பாடலைப் பாடினார்.

"நாம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வரும்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனும்
நாம மில்லை நரகமு மில்லையே."

நித்தியானந்த சாமிகள், பாட்டை இரண்டு ன்று முறை, அடியடியாகப் பிரித்துப் பாடி ார்; அதற்கு அவ்வப்பொழுது அர்த்தமும், ளக்கமும் தந்தார், "மங்கையரால் வருகிற ாமம் என்பது இல்லையென்றால், உலகத்தில் கடு என்பதின் பெயரே இல்லாமற்போய் டும், நரகம் என்பதும் இல்லாமற் போய் டும், என்று கம்பர் அழகாகக் கூறுகிறார். பண்கள்தாம், இந்த உலகத்தைப் பிடித் ள்ள இராகு கேதுக்கள் என்றும் கல்வியிற் பரிய கம்பர் பாடுகிறார். பெண்களின் காமக் ரோதங்கள்தாம், பலவகைப் பாபக்காரியங் ளுக்கு ஆரம்பமாயிருக்கின்றன."

கமலநாதனுக்கு அன்று தான் வாதிட்ட ழக்கு ஞாபகத்துக்கு வந்தது. ஒரு பெண் ால், அடிதடி சண்டைகளும், கொலையும் டந்திருக்கின்றன. பெண்ணாசையால், ஒருவன் காலைகாரனாகிவிட்டான்.

"பெண்ணாகிவந்ததொரு மாயப்பிசாசம் என்று ட்டினத்துச் சாமிகளும் அதனால்தான் சொன் ார். மாயப்பிசாசத்தை நாம் எப்படி நம்பமுடி ாதோ, அப்படியே பெண்ணையும் நாம் நம்ப டியாது. அவர்கள் செய்கிற மாயங்களும், சப்புகளும், மயக்கமும், பாவனையும் எல்லாம் ாயையின் அம்சங்களே."

சாமிகள் சொல்வதைக் கேட்டுக்கொண் டிருக்கும்பொழுது, கமலநாதனுக்கு அடிக்கடி கோர்ட்டும் குற்றவாளிகளின் முகங்களும் ஞாபகத்துக்கு வந்தன. கூண்டில் நின்று குற்றவாளிகள் சாட்சி சொல்லும்பொழுது எவ்வளவு பயபக்தியுடன், ஒன்றுமே தெரியா தவர்கள்போல பாவனைசெய்கிறார்கள். "சத் தியமாகச் சொல்றேனுங்க, எனக்கு ஒன்றுமே தெரியாதுங்க!" பட்டப் பகலில் கொலைசெய்து விட்டுக், கத்தியும் கையுமாகப் பிடிபட்டவர்கள் கூட, சாட்சிக் கூண்டில் இருக்கும்பொழுது மகாச் சத்தியவந்தர்களாக மாறிவிடுகிறார்கள். அதிலும் பெண்கள் வந்துவிட்டால் போதும், பாதி பதில் அழுகையிலும், விம்மலிலும் போய்விடும். அவர்கள் சொல்வதில் எவ்வ ளவுதூரம் உண்மையிருக்கிறதென்பதைக் கண்டுபிடிக்கவே முடியாது.

வெளியில் நின்று கமலநாதன் பலப்பல யோசித்துக்கொண்டிருக்கும்பொழுது, கூட் டம் கலைந்துபோவது அவனுக்குத் தெரிந்தது. பிரசங்கம் முடிந்துவிட்டதை அவன் உணர வில்லை. உள்ளேயிருந்து வந்த அனந்த நாராயணன் கமலநாதன் நிற்பதைக் கண்டார்.

"உடனே போவதாகச் சொல்லிவந்தீர் களே! பிரசங்கத்தில் ஈடுபட்டு நின்றுவிட்டீர் கள், பார்த்தீர்களா! பிரசங்கம் எவ்வளவு திவ்வியமாக இருந்ததென்று."

"நன்றாக இருந்தது. எவ்வளவு அழகாக அவர் பேசுகிறார்."

பிரசங்கம் செய்த நித்தியானந்த சாமிகள் வெளிவந்தார்: இரண்டொரு சீடர்கள் சூழ்ந்து வர.

"நமஸ்காரம், சாமி!" என்று அனந்தநாரா யணன் வணங்கினான்.

"ஓ! அட்வகேட் ஐயாவா! உங்களை நான் பார்க்கவேயில்லையே!" என்று சாமிகள் பரி வுடன் விசாரித்தார்.

"நேரங்கழித்து வந்தேன். பின்னால் உட் கார்ந்துவிட்டேன். உங்களுடைய பிரசங்கம், இன்னைக்கு, அடாடா! இனிமேல் மறக்கவே முடியாது. இதோ! இவர்—கவர்மென்ட் பிராசிகியூட்டர்—கமலநாதன் இவரும் என்னை இங்கே இறக்கிவிட்டுப் போகவந்தார். ஆனால் தங்கள் பேச்சில் திளைத்து, அப்படியே நின்று விட்டார்."

"நிரம்ப சந்தோஷம்! எல்லாம் எம்பிரான் திருவருள்! ஆறுமுகத்தானின் கடாட்சம்!

நான் அவசரமாகப் போகவேண்டும். திருவாவடுதுறை ஆதீனத்தில், மதப் பாதுகாப்பு மகாநாடு ஒன்று நடக்க இருக்கிறது. அதற்கு அடியேனும் வரவேண்டுமென்பது ஆதீனத்துக்கட்டளை! உங்களை மீண்டும் சந்திக்கும் வாய்ப்பினை அப்பன் சாமி அருளுவானாக! திருமுருகா!” என்று இருவருக்கும் பெரிய கும்பிடு போட்டு நகர்ந்தார்.

மிக அருகில் பார்க்கும்பொழுது இளமையுடனும், மினுமினுக்கும் உடலுடனும் நித்தியானந்த சாமிகள் காணப்பட்டார். அவருடைய திருமேனியெங்கும், விபூதிப்பட்டைகள் அழகாகத் தீட்டப்பட்டிருந்தன. மேலே காவியில் நனைக்கப்பட்ட பட்டுப்போர்வை, கழுத்தில் உருத்திராட்சக் கொட்டை. பேசும்பொழுது, சாமிகள் அடிக்கடி தமது கருமையான மெலிந்த தாடியைத் தடவிக்கொண்டார்.

“பார்த்தால் மிக இளையவராக இருக்கிறாரே!”

“மிக இளம் வயதிலேயே, பக்தியில் ஈடுபட்டு, திருச்செங்கோடு மலைக்கருகில் ஒரு குகையில் நிஷ்டையில் அமர்ந்திருந்தாராம். நாலைந்து வருஷங்கள் பேச்சுமூச்சின்றி ஏதுமே சாப்பிடவும் இல்லையாம். பின் முருகன் தோன்றி, வேலால் இவரைத் தட்டியெழுப்பி, காட்சிதந்து சென்றாராம். அதிலிருந்து இவர் முருகப்பெருமானின் பெருமையைப் பேசியும், பாடியும் வருகிறார். திருப்புகழ் நன்றாகப் பாடுவார்; தேவாரம், திருவாசகம் அவருக்குத் தலைகீழ் பாடம்! இவருடைய பிரசங்கத்தைக் கேட்டு எவ்வளவோ நாஸ்திகர்கள் ஆஸ்திகர்களாகியிருக்கிறார்கள்!” என்று நித்தியானந்த சாமிகளைப்பற்றி அனந்தநாராயணன் சொல்லிக்கொண்டிருந்தார்.

கடைசியாக அனந்தநாராயணனை அவர் வீட்டின்முன் இறக்கிவிட்டு, கமலநாதன் மட்டும் தனியாகச் சென்றார். போகும்போது, பகலில் நடந்த வழக்கின் வாதங்கள் ஞாபகத்துக்கு வந்தன. அதைத் தொடர்ந்து, நித்தியானந்த சாமிகளின் பேச்சு ஞாபகத்துக்கு வந்தது. தன்னைவிட, நித்தியானந்தசாமி அந்த வழக்கில் வாதிட்டிருந்தால், இன்னும் தெளிவாக, பலமாக இழைக்கப்பட்ட குற்றங்களின் கொடுமையைத் தெரிவித்திருப்பார். கமலநாதனின் மனத்தில் மீண்டும் அந்தக் குற்றவாளிகள்—கொலை செய்தவன், ஒழுக்கங்கெட்டவள், மற்றும் அவர்களுக்கு உதவியாக இருந்தவர்கள், வந்து நின்றார்கள். அவர்களுக்குப் பின்னாலிருந்து, நித்தியானந்த சாமிகள் பாடுவது தெரிந்தது. “தூமகேது புவிக்கெனத் தோன்றிய...” ஆமாம்! ஒழுக்கங் கெட்டபெண்கள் எவ்வளவு தூரம் வாழ்க்கையைச் சிதைத்துச் செல்கிறார்கள்.

கார் நின்றது. கமலநாதனின் வீடு வந்தது. மணி ஒன்பதை நெருங்கியது. தோட்டம் அமைதியில் ஆழ்ந்திருந்தது. கமலநாதன் மெதுவாக நடந்து, வாயற்படியை அடைந்தான். முன் ஹாலில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. தங்கம் சிரிக்கும் சத்தம் கேட்டது. மற்றொருவர்—பேசுவது கேட்டது. கமலநாதன் சற்றுத் தாமதித்து வெளியிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து, பூட்சைக் கழற்றினான்; உள் பேசப்படுவதைக் கேட்டவண்ணம்

“இல்லை, தங்கம்!” பேசுவது ஆண்குரலாக இருந்தது. அவ்வளவு உரிமையுடன் யார் பேசுவது, மறுபடியும் கமலநாதன் உற்றுக் கேட்டான். “நான் மெதுவாகப் பதுங்கிக் கொண்டு, கிழிந்த சட்டையை மடித்துக் கொண்டு உள் நுழைந்தேன். ஆனால் வண்ணானுக்குச் சட்டை போடும்பொழுது, நீதான் சொல்லிவிட்டாய்!”

“எனக்கென்ன தெரியும்! கிழிந்த சட்டையைத் தூக்கிப் போட்டேன்” என்று தங்கம் சிரித்தாள்.

“புதுச் சட்டையைக் கிழித்ததும், இரண்டு அடி கிடைத்தது” பேசுவது குலசேகரன் என்று கமலநாதனுக்குத் தெரிந்தது. மேற்கொண்டு அவர்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்று கேட்கத் தோன்றியது. சே! மறைந்து நின்று ஒட்டுக்கேட்பது என்ன கெட்ட வழக்கம்! என்று பூட்சை உள்ளே தள்ளிவிட்டு, கமலநாதன் உள் நுழைந்தான்.

“ஓ! எவ்வளவு நேரமாகக் காத்துக்கொண்டிருப்பது!” தங்கம் அவ்வாறு வரவேற்றாள்.

“ஹலோ! குலசேகரனா? எப்படியிருக்கிறாய்?” என்று ஒன்றும் தெரியாதவன்போல் குலசேகரனைப்பார்த்துக், கமலநாதன் விசாரித்தான்.

இரவு கமலநாதன் மனம் சோர்வடைந்திருந்தது. நெடுநேரம் தூக்கம் பிடிக்காமல் புரண்டான். விளக்கைப் போட்டுப், பத்திரிகைகளைப் புரட்டினான். காலையில் நடந்த வழக்கு விவரம் போடப்பட்டிருந்தது. மறுபடியும் குற்றவாளிகள் ஞாபகத்துக்கு வந்தனர்.

(தொடரும்)

# அண்டசராசரம் - 10

[இரா. செழியன்]

[இந்து மதத்தின் வேத, புராணங்களின்படி, அண்டசராசரங்களையெல்லாம் பிரமதேவன் படைத்தான். இவ்வளவு பெரிய பிரமாண்ட படைப்புக்கு ஆதாரமாக—அஸ்திவாரமாக ஒரு ஆமை வைக்கப்பட்டது. ஆமை முதுகின்மேல் அஷ்டதிக்கு யானைகளும், ஆயிரந்தலை ஆதிசேடனும் இருக்கின்றன. அவைகளுக்குமேல் ருத்ரர்கள் வசிக்கும் ருத்ரபுவனம் இருக்கிறது. ருத்ரபுவனத்துக்குமேல் புகைமண்டலம். புகைமண்டலத்துக்குமேல் வெட்டவெளி. அவற்றுக்குமேல் யமபட்டணங்களும், அதையடுத்து 28 கோடிநரகங்களும் நிற்கின்றன. நரகலோகத்தின்மேல் கூஷ்மாண்டபுவனம் அதற்குமேல் ஏழு பாதாளங்கள். அதையடுத்து ஆடகேசுரபுவனம், அதையும் கடந்தால் பூலோகம். பூலோகத்திற்கு உயரே புவலோகம் ஆரம்பிக்கிறது. புவலோகத்தில் மேகமண்டலங்களும், வீரசுவர்க்கமும், காந்தருவர் வித்தியாதரர்களும், கருடன், ஐராவதம் போன்றவைகளும் உள்ளன. புவலோகத்துக்கு மேல் சூரியலோகம். சூரியலோகத்துக்கு அப்பால் சந்திரலோகம். சந்திரலோகத்துக்கு மேல்நோக்கி, அடுத்தடுத்து முறையே, நட்சத்திரமண்டலம், செவ்வாய் மண்டலம், புதன் மண்டலம், பிரஹஸ்பதி மண்டலம், சுக்கிரமண்டலம், சனிமண்டலம் முதலியன இருக்கின்றன. சனிமண்டலத்தில், சனிபகவானைத் தவிர, இராகு கேதுக்கள் இருக்கின்றன. அதற்கு மேலுள்ள சப்தரிஷி மண்டலத்தில், அத்திரி, வசிட்டர் முதலான ஏழு ரிஷிசிரேஷ்டர்கள் இருக்கின்றனர்......]

## சமதக்கினி

சப்தரிஷிகளில் ஏழாவதாக இருப்பவர் சமதக்கினி.

இருசிகர் என்னும் முனிவர் ஒருசமயம் காதிராசன் என்னும் மன்னனிடம் யாசகம் கேட்கச் சென்றாராம். முனிவர் யாசகம் கேட்டதும், மன்னன் ஏதாவது பசு, தானியம், இவைகளைத்தான் கேட்பார் என்று நினைத்து வாக்குத்தத்தம் செய்துதந்தான். வாக்குறுதியை வாங்கிக்கொண்டதும், முனிவர் "உன்னுடைய மகளை எனக்குத் தானமாகத் தா!" என்று கேட்டுவிட்டார். மன்னன் இதை எதிர்பார்க்கவில்லை. காவியுடைதாரி, கமண்டல வேடதாரி, அவர் கன்னிமாடத்துப் பெண்ணை மனதில் வைத்து யாசகம் கேட்பார் என்று எண்ணவில்லை. இளவரசி—இளமையும் அழகும் மிளிர வளர்ந்திடும் தன் மகள், இந்தக் காவியுடை காட்டுவாசிக்கா என்று கலங்கினான். மன்னனின் கலக்கம் முனிவரிடம் கோபத்தை உண்டாக்கியது. "ஏ காதியரசனே! யாசகம் கொடுப்பேன் என்ற சொல்லை மாற்றி, இல்லையென்று சொல்லிவிடு; நான் போய்விடுகிறேன்!" என்று கேட்டுக்கொண்டார். முனிவரின் பேச்சில் அடங்கியிருந்த மிரட்டுதலை அரசன் உணராமலில்லை. பிராமணோத்தமர்களுக்கு யாசகம் மறுப்பது மாபெரும் பாவம், அதிலும் வாக்குத்தத்தம் செய்துவிட்டு இல்லையென்பது மிகக் கடும் நரகத்தைத் தரும் என்ற வேதவாக்குகள் அவனுக்குத் தெரியும். வேறு வழியின்றி, மாடுகன்றுகளை தானஞ்செய்து அனுப்புவதுபோல, தன் மகளைத் தானஞ்செய்துகொடுத்தான். இருசிகர் காதிராசன் மகளான சத்தியவதியை அழைத்துக்கொண்டு காடு ஏகினார். அங்கு இருசிகர் தவம் செய்தார், சத்தியவதி பணிவிடை செய்தாள். 'தவத்தின்' சிறப்பாலும், 'பணிவிடையின்' மேன்மையாலும், அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையே பின் சமதக்கினி முனிவரானது.

சமதக்னி மனைவி ரேணுகை. இவர்களுக்கு உருமதி, உத்திசாகன், விச்சுவாசு, பரசுராமர் ஆகிய நால்வரும் புத்திரர்கள். ஒருசமயம் இரேணுகை நீராடச் சென்றிருந்தாளாம். அங்கு அங்கதேசத்து அரசன் சித்ரசேனனைக் கண்டாள். சித்ரசேனன் அழகும், இளமையும் விளங்கும் வாலிபன். சாம்பல் பூசி, சடாமுடிதாரியாக இருக்கும் சமதக்கினியைப் பார்த்துச் சலித்துப்போயிருந்த இரேணுகையின் கண்களுக்கு, சித்ரசேனனின் அழகு புதுமை

யாக இருந்தது. அவன் அழகில் இரேணுகை மயங்கினாள்.

ஆற்றில் நீரெடுக்கச் சென்ற இரேணுகை நீண்டநேரம் கழித்து வருவதைச் சமதக்னி கவனித்தார். சித்ரசேனன் அழகில் மயங்கி, கற்புநிலை கெட்டுவிட்டாளென்பதை உணர்ந்தார், உடனே முனிபுங்கவர் தனது, நான்கு குமாரர்களைக் கூப்பிட்டு, தாயைக் கொலை செய்துவரும்படி உத்தரவிட்டார். முதல் மூன்று குமாரர்களும் மறுத்தனர். கடைசியாகப் பரசுராமர் மட்டும் சம்மதித்து, வாளெடுத்து, தாயின் கையைப் பற்றி இழுத்துச் சென்றார். பலர் தடுத்தனர். அவர்களையெல்லாம் பரசுராமர் வெட்டிப்போட்டார். கடைசியாக தன்னைப் பெற்றெடுத்த தாயின் தலையை, பரசுராமர் வெட்டினார். இரத்தம் கொப்பளிக்க, தாயின் தலை மகனின் காலடியில் வீழ்ந்தது.

தாயைக் கொலைபுரிய முதல் மூன்று குமாரர்கள் மறுத்தனர், அவர்கள் வேடராகச் சபிக்கப்பட்டனர் சமதக்னி முனிவரால். தாயைக் கொன்று வீரத்துடன் வந்த பரசுராமருக்கு வரங்கள் பல கிடைத்தன.

சமதக்னி முனிவர் கட்டளையிடும்பொழுதெல்லாம், பரசுராமர் வாளை வைத்துக்கொண்டுத் தயாராக இருப்பார் போலும். ஒருசமயம் கார்த்தவீரியன் என்ற மன்னனும், அவனது குமாரர்களும் சமதக்னி முனிவருடன், சச்சரவு கொள்ள, தந்தையின் ஏவலால் பரசுராமர் கார்த்தவீரியனையும், அவன் குமாரர்களில் பலரையும் கொன்றுகுவித்தார். பின் பரசுராமர் இல்லாத சமயம்பார்த்து, கார்த்தவீரியனின் குமாரர்களில் சிலர்—அவர்கள் பரசுராமரின்வாளுக்குத் தப்பிப் பிழைத்தவர்கள்—ஆசிரமத்திற்குள் புகுந்து, சமதக்னி முனிவரைக் கொன்று வஞ்சந்தீர்த்துக்கொண்டனர். இதற்குப் பின், பரசுராமர் கார்த்தவீரியன் வம்சத்தை, இருபத்தோறு தலைமுறைவரை அழித்தார் என்று கூறப்படுகிறது. கொலை செய்யப்பட்ட சமதக்னி, பின் சப்தரிஷிமண்டலத்தில் இடம்பெற்றார்.

இவ்வாறு அத்ரி, வசிட்டர், காசிபர், கௌதமர், பரத்துவாசர், விசுவாமித்திரர், சமதக்னி ஆகிய எழுவரும் சப்தரிஷி மண்டலத்தில் இடம்பெற்றுள்ளனர். புராண "அளப்புப்படி", சனி மண்டலத்துக்குமேல், 8 கோடி 5 லட்சம் மைல் உயரத்தில் சப்தரிஷி மண்டலம் பரவியிருக்கிறது.

## சிஞ்சுமாரம்

சப்தரிஷி மண்டலத்துக்குமேல் ஒருகோடி மைல் உயரத்தில், சிஞ்சுமாரம் என்ற கால சக்கரம் இருக்கிறது. அது முதலையின் உருப் போன்றது. காலத்தை காட்டுவதற்கு முக்கிய இடமாகவுள்ளது. இதனைச் சுற்றி நாள் தோறும், துருவன், இந்திரன், வருணன், காசிபன் முதலிய நால்வரும் சுற்றிவருகின்றனர். இதன் வாலில் அக்னியும், வாயில் அகத்தியரும், முகத்தில் அங்காரகனும், இடுப்பில் பிரகஸ்பதியும், வயிற்றில் சனியும், மார்பில் சந்திரனும், அஸ்வனி தேவர்களும், ரோமங்களில் நட்சத்திரங்களும் தங்குவதாகப் புராணம் கூறுகிறது.

இதற்குமேல் 2 கோடி மைல் உயரத்தில் தேவலோகம் இருக்கிறது.

## இந்திரன்

தேவர்கள் மொத்தம் முப்பத்துமூன்று கோடி என்று புராணக்கணக்கு கூறுகிறது. இவர்கள் இருப்பது தேவலோகம் அல்லது சுரலோகம் என்ற பெயருடையது. தேவர்கள் அமிர்தமுண்ட காரணத்தால், இறப்பு பிறப்பு எதுவும் இல்லாது சிரஞ்சீவியாக இருப்பவர்களாம். இவர்கள் காலடி நிலத்தில் படாதாம், கண்கள் மூடாமல் எப்பொழுதும் விழித்தபடி இருக்குமாம். தேவலோகத்தில் காமதேனு, கற்பகத்தரு, பாரிசாதம் போன்ற அதிசயப் பொருள்கள் உள்ளன. அரம்பை, ஊர்வசி, திலோத்தமை, மேனகை போன்ற ஆடல் அழகிகள் உள்ள உலகம். இந்த உலகத்தில் இருப்பவர்களுக்கு இரவு பகல் என்று எதுவும் கிடையாது. அதனால் இரவில் செய்யப்படவேண்டியவை பகலிலும், பகலில் நடக்க வேண்டியவை இரவிலும், எத்தகைய வேற்றுமையின்றி, தேவர்கள் செய்ய முற்பட்டுவிடுகின்றனர்போலும்.

முப்பத்து முக்கோடி தேவர்களுக்குத் தலைவனாக இருப்பவன் இந்திரன். ஆரிய இனத்தின் பழைய ஏடான ரிக்வேதத்தைப் பார்த்தால், அதில் இந்திரனே முக்கிய கடவுளாகப் பல இடங்களிலும் ஏத்திப் பேசப்பட்டுள்ளது. "தமிழர்களை அழித்துவிடு!" "செல்வமிக்க இந்த தஸ்யுக்களை ஒழித்துக்கட்டு!" என்றெல்லாம் இந்திரனை நோக்கி ஆரியர்கள் பாடிய பாடல்கள் பலப்பல ரிக் வேதத்தில் இருக்கின்றன. உதாரணமாக, ரிக்வேதம் முதல் மண்டிலம் 33-வது பாடலில் "செல்வத்திற் சிறந்த

தஸ்யுக்களைத் தனியாகத் தன் வச்சிரப்படையால் கொல்பவன்'' என்று இந்திரன் புகழப்படுகிறன். ''தஸ்யுக்கள்'' என்று ஆரியர்கள் கூறுவது, பண்டையத் தமிழர்களையாகும். மிக வறுமைநிலையில், ஆடுமாடுகளை மேய்த்து, நாடோடிகளாக வாழ்ந்த ஆரியர்களுக்கு, செல்வத்திற் சிறந்த தமிழர்களைப் பார்க்குந்தோறும் பொருமையும் வெறுப்பும் உண்டாகி, அந்தத் தமிழர்களை—''தஸ்யுக்களை'' கொன்று விடுமாறு இந்திரனை வேண்டிக்கொண்டுள்ளனர். இதுபோல பலவிதமான பாடல்கள் இந்திரனைப்பற்றி இருக்கு வேதத்தில் வருகின்றன.

இவ்வாறு ஆரியர்களுக்கு மிக முக்கியமான கடவுளாக இருக்கு வேதத்தில் இடம்பெற்றிருக்கின்ற இந்திரனின் குணாதிசயங்கள், ஒழுக்க சீலங்கள் எந்த அளவு இருந்தன வென்று, அந்த ஆரிய வருணத்தினர் தீட்டிய புராண, இதிகாசக் கதைகளை வைத்தே பார்க்கலாம்.

இந்திரன் என்று கூறப்பட்டதும், அவன் அகலிகையைக் கற்பழித்ததும், பின் ஆயிரங் கண்ணனுகை ஆனதுமான கதை பலருக்கு நினைவுக்குவரும். இந்தக் கதை பலருக்கும் நன்கு தெரியும். கௌதமமுனிவர் பற்றிய விவரத்தில் ஓரளவு கூறப்பட்டது. ஆதலால் அதைப்பற்றி அதிகம் கூறத் தேவையில்லை.

காட்டிலே கடுந்தவம் புரியும் முனிவர்களின் ஆசிரமங்களைத் தேடிப்பிடித்து, அதில் கதி பற்றுக்கிடக்கும் குருபத்தினிகளை இந்திரன் பலதடவை கொள்ளைகொண்டிருக்கிறன். அந்தப் பல குருபத்தினிகளில் அகல்யாவின் கதை ஒன்று ஆகும்.

தேவசன்மா என்ற ரிஷி சிரேஷ்டர் காட்டிலே கடுந்தவஞ் செய்துகொண்டிருந்தார். அவருடைய பத்தினி—உரிசை யென்ற பெயரினள்—வரித்தெடுத்த அழகினள்—ஆச்சிரமத்தில் துணையாக இருந்தாள். இவர்கள் இருவருக்கும் பணிவிடைசெய்ய விபுலன் என்ற சீடன் இருந்தான். உலகைத் துறந்து வந்த முனிவர்—ஒன்றுந் தெரியாத சீடன் இவர்களுக்கு மத்தியில் உரிசை வாழ்ந்துவந்தாள். உரிசையின்மீது—உரிசையின் குடிலின் மீது இந்திரன் எப்பொழுதும் ஒரு கண் வைத்திருந்தான்; தக்க சமயத்தை எதிர்பார்த்து.

ஒரு நாள் மாலை குருவும் சீடனும் உலவப் போனார்கள், வேதாந்த விசாரணை நடத்திக் கொண்டு. அப்பொழுது உரிசைத் தனியாக உட்கார்ந்திருந்தாள். தக்க சமயம் வாய்த்ததென இந்திரன் வந்தான் ரிஷி வேஷத்தில் குருவும் சீடனும் போனவர்களில், குருமட்டும் தனியாகத் திரும்பி வந்ததைப் பார்த்த உரிசை எழுந்து நின்று வணங்கினள், ''ஏதேனும் வேண்டுமா?'' என்று பணிவுடன் வினவினள். எதற்கும் கடுகடுத்த பார்வையுடன், கனத்த குரலில் பேசிடும் தன் கணவர் இப்பொழுது, ஏதும் பேசாமல், கனிவுடன் பார்ப்பதை உரிசை உணர்ந்தாள். பார்வையில் கனிவு மட்டுமல்ல, காமமும் தாபமும் கலந்திருந்தன. என்றுமில்லாதவாறு! உரிசையின் முகம் நாணத்தால் சிவந்தது. இன்றைக்காவது அவள் உள்ளத்தில் சிறிது மகிழ்ச்சி யுண்டானது, எதிரே நின்ற வேடதாரியின் கண்கள் அவளின் அழகை அளவெடுத்துக் கொடுத்துக்கொண்டிருந்தன. மாலை நேரம். மங்கிவரும் வேளை. உரிசை தலைகுனிந்து நின்றாள். இந்திரன் அருகில் வந்தான், பாகுமொழி பேசினன்.

இந்த நேரத்தில் சீடன் விபுலன் குடிசைக்கு வந்தான், சந்தியாவந்தனத்துக்கு வேண்டிய தர்ப்பையை எடுக்க.

(புராணத்தில், உரிசையின் உடல் குற்றமடைந்துவிட்டதென்று ஓரிடத்திலும், மாறு வேடத்தில் வந்த இந்திரன் அவளை மயக்கும் கடைசி நேரத்தில் விபுலன் வந்து, அதற்குத் தடையுண்டாக்கினனென்று மற்றோரிடத்திலும் கூறப்பட்டுள்ளது, எது உண்மையோ? புராணக் கதை! அதை நாம் ஆராய்ச்சி செய்யக்கூடாது, ஆராய்ச்சி செய்யவும் வேண்டாம்!)

குடிசைக்கு வந்த சீடனுக்கு வியப்பும், திகைப்பும் உண்டாயிற்று. சற்றுமுன் ஆற்றோரத்தில் விட்டுவந்த குரு எப்படித் தனக்கு முன்னதாக ஓடிவந்து, குருபத்தினியுடன் சரசமாட வந்துவிட்டாரென்று, உள்ளே நுழைந்தவன் குருவின் மகிழ்வையும், உரிசையின் நெகிழ்வையும் கண்டு, தலைகுனிந்து வெளியேவந்து, குரு வேறு வந்தனத்தில் ஈடுபட்டுவிட்டதால், தான் மட்டும் சந்தியா வந்தனம் செய்யலாமென ஆற்றங்கரையை நோக்கிச் சிறிது நடந்தான். இரண்டடி வைத்ததும் ஆற்றங்கரையில் குரு நிற்பது தெரிந்தது. சீடனுக்குச் சித்தங் கலங்கிவிடும் போலிருந்தது. குரு அங்கு, குடிசைக்கு வந்தான். இங்கும் ஒரு குரு இருந்தார்! விபுலனுக்குச் சந்தேகம் வந்தது. பின் ''ஞானதிருட்டியைத்'' தட்டிவிட்டான். இந்திரன் மாறு வேடம் பூண்டு வந்திருப்பதைக் கண்டான். உடனே இந்திரனைக்கொல்ல, விபுலன் சாபங்

தரப்போனான். இந்திரன் அஞ்சித் தன் சுய உருவத்துடன் வந்து, விபுலனின் காலில் விழுந்து கேட்டுக்கொள்ள, விபுலன் மன்னித்து அனுப்பினான் என்று புராணம் கூறுகிறது. என்ன காரணத்தால் விபுலன் இந்திரனை மன்னித்தான் என்று தெரியவில்லை. புராணக்கதையை மேற்கொண்டு பார்த்தால், ஒருசமயம் ஒரு தேவமாது அணிந்திருந்த பூமாலையைப் பார்த்து உரிசை விருப்பங்கொள்ள, விபுலன் தேவலோகம் சென்று மலர்மாலையைப் பெற்றுவந்து கொடுத்தான் என்று கூறப்படுகிறது. சீடன் குருபத்தினிக்கு அவர் விரும்பிய மலர்மாலையை கொண்டுவந்து கொடுத்திருக்கிறான். உரிசைக்கு விபுலன் செய்த பணிவிடைகள், குருபத்தினி தாரைக்கு சந்திரன் செய்ததைப்போல முடிந்ததோ என்னவோ? எப்படியிருப்பினும், உரிசையின் மேல் மோகங்கொண்டு, மாறுவேடமணிந்து சென்ற இந்திரன் மன்னிக்கப்பெற்று, திரும்பி வந்தான்.

ஆசிரம அணங்குகளுக்குத் துணையாக, மாறுவேடந்தாங்கி இந்திரன் சென்ற மற்றொரு கதை.

காட்டில் (எந்தக்காட்டில் என்று கேட்டுவிடாதீர்கள். புராணங்களில் பலப்பல முனிவர்களைப் பற்றிக் கூறும்பொழுது, காட்டில் கடுந்தவம் புரிந்ததாகக் கூறப்படுகிறதேயன்றி, காட்டின் பெயர் கூறப்படுவதில்லை! கவிமுனிவர் என்பவர் தவஞ்செய்துகொண்டிருந்தார். அவருக்கு மனைவியாக முகுந்தை என்பவள் ஆசிரமத்தில் இருந்தாள்—அவள் ஒரு பேரழகி என்று கூறத் தேவையில்லை. அந்த ஆசிரமத்தில் கவிமுனிவரையும், அவர் மனைவி முகுந்தையையும் தவிர வேறு யாரும்—சீடர்கள்கூட கிடையாது. எனவே முனிவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து வாழ்ந்து வந்தாள்—இல்லை காலங்கழித்துவந்தாள். பக்கத்திலிருக்கும் முகுந்தையைப்பற்றிக் கவலைப்படாமல், பரமண்டலத்து முக்தி நிலையைப் பற்றி கவிமுனிவர் வெகுவாகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் முகுந்தை ஆசிரமத்திலிருந்து தூரப்போய் யாகத்திற்கு வேண்டிய விறகுகளை எடுத்துக்கொண்டு, மலர் கொய்து, அங்கு உட்கார்ந்து தொடுத்துக்கொண்டிருந்தாள். அப்பொழுது ஆச்சிரமத்து மான்குட்டி—அவள் வளர்த்துவரும் மான் வெருண்டோடி அவளருகில் வந்தது. யாரோ வேடுவர்கள் துரத்தியிருக்கின்றனர். அது பயந்து, உடல் நடுங்க, கண்களில் மிரட்சியுடன் அவள் பாதுகாப்பைத் தேடிவந்தது. ஆசிரமத்து மானைக் கொலைசெய்யவந்த கொடுமையாளர்களைக் கண்டிக்க எண்ணி, மானை அழைத்துக் கொண்டு, வெளிவந்தாள், யாரையும் காணோம்; சிறிது தூரம் நடந்தாள்; மறைந்திருந்த பாறையைத் தாண்டி, அடிவைத்தாள்! அங்கே ஒரு ஆணழகன் குதிரைமீது அமர்ந்து சுற்றிலும் தேடுவதைக் கண்டாள்!

உண்மையிலேயே அவன் ஒரு ஆணழகன் தான்! எவ்வளவு கம்பீரத்துடன குதிரைமீது அமர்ந்திருக்கிறான்! வைத்தவிழி வாங்காது முகுந்தை அவனைப் பார்த்தபடி நின்றாள். அவன் பரித்தெடுக்கும் பார்வையிலே, விரித்தெழுத ஒண்ணு முகச்சித்திரத்திலே, தன் உள்ளத்தைப் பறிகொடுத்து முகுந்தை நின்றாள்!

அவன் திரும்பிப்பார்த்தான். தான் தேடிவந்த கலைமான் ஒரு பெண்ணருகில் நிற்பதைக் கண்டான்! அவளைப் பார்த்தால், உடையிலிருந்து, தலை முடியிலிருந்து ஆசிரமத்து வாசியென்று தெரிந்தது! ஆசிரமத்து மானை—அந்தப்பக்கத்தில் கவிமுனிவர் ஆசிரமம் இருப்பது அவனுக்குத் தெரியும்—தான் வேட்டையாட நினைத்தது அவனுக்கு வருத்தத்தைத்தந்தது. இறங்கி நின்று, "அம்மணி! ஆசிரமத்து மானென்று அறியாமல் துரத்தினேன்! மன்னிப்பீர்களாக!" என்று அவன் போய்விட்டான்.

ஆகா! மொழியிலே எவ்வளவு கனிவு இருக்கிறது! ஐயோ! அதற்குள் போய்விட்டாரே! மறுமொழி ஏதேனும் கூறியிருந்தால், சிறிது நேரம் நின்றிருப்பாரல்லவா! தன்னைத் தானே முகுந்தை நொந்துகொண்டாள். அவர் வந்தவர், போய்விட்டார்! அந்த இடம் வெறிச்சென்றிருந்தது, வாழ்வே அவளுக்கு வெறிச்சென்றிருந்தது! ஒடித்த விறகை மறந்தாள், தொடுத்த மாலையை மறந்தாள், பின்தொடரும் மானை மறந்தாள், தன்னையே அவள் மறந்தாள்; தான் கண்ட ஆணழகனின் உருவம் மட்டும்தான் அவளுடைய நினைவில் இருந்தது.

உருக்குமாங்கதன் என்ற மன்னன் வேட்டைக்கு வந்திருக்கிறானாம். கவிமுனிவர் அன்றிரவு சொன்னார்.

"உருக்குமாங்கதன்! உருக்குமாங்கதன்!" அந்த மன்னனின் பெயரை—அவள் மனதைக் கொள்ளை கொண்ட மன்னனின் பெயரை முகுந்தை அடிக்கடி உச்சரித்தாள். உருக்குமாங்கதன்! அவள் மனதை உருக்கிவிட்டான்

மறுநாள் முகுந்தை தன்னை நன்றாக அலங்கரித்துக்கொண்டு, மணிபூண்டு, மலர்சூடி, மணங்கமழும் நறுஞ்சாந்து நீவி, மானைப் பிடித்துக்கொண்டு, அரசன் வேட்டைக்குப் புறப்படும் திக்கில், ஒரு மரத்தடியில் காத்திருந்தாள். நீண்டநேரம்கழித்து மன்னன் உலவ வந்தான், தனியாக. வழியில் மானைப் பிடித்துக்கொண்டு மங்கையவள் நின்றாள்.

உருக்குமாங்கதன் ரிஷி பத்தினிக்கு வணக்கம் செய்தான். ரிஷிபத்தினி புன்முறுவல் செய்தாள்.

“அம்மணி! என்னசெய்யவேண்டும்?”

“அரசே! உங்களுக்கு வேண்டிய மானைப் பிடித்துவந்தேன்.”

“எனக்கு மான் தேவையில்லையே?”

“நேற்று பின் இதைத் துரத்திவந்தீர்களே!”

“ஆச்சிரமத்து மான் என்று, தெரியாமல் துரத்தினேன்.”

“ஆச்சிரமத்து மான் என்றால் அரசருக்கு ஏற்றதல்ல என்று அர்த்தம்?” மான்விழி மின்னிட, முகுந்தை கேட்டாள்.

“அப்படியல்ல. ஆசிரமத்துக்கு நாங்கள் கொடுத்துதவுவதுபோக, அங்கிருந்து எடுத்துச் செல்வது கூடாது!”

“ஆசிரமத்து மான் உங்களை நாடி வந்திருக்கிறது, அதை ஏற்றுக்கொள்ளமாட்டீர்களா?” முகுந்தையின் பேச்சில் கனிவும், பார்வையில் மயக்கமும் இருந்தது.

“நீங்கள் சொல்வதால்...”

“நான் சொல்வதென்ன? இருதயபூர்வமாக அன்புடன் தருகிறேன், மறுக்காமல் ஏற்றுக்கொள்ளுங்கள்!”

“சரி, மறுக்கவில்லை, தாருங்கள்!” என்று உருக்குமாங்கதன் கை நீட்டினான்.

“இதோ! அரசே! என் அன்பே! ஏற்றுக்கொள்ளுங்கள்!” என்று அரசன் கைகளை முகுந்தை பற்றி நின்றாள்!

அரசன் திடுக்கிட்டான், கையை உதறித் தள்ளினான். “ஆகாது இந்தச் செயல், அம்மணி! குருபத்தினி நீங்கள்! வேந்தன் நான்! இருவரும் முறைதவறுதல் கூடாது!”

“குருபத்தினி, ஆனால் குரூரமாகவா இருக்கிறேன்! அரசே! அந்த மானிடம் காட்டும் பரிவு, பாசத்தை என்னிடம் காட்டலாகாதா! உங்கள் அடிமை நான், என்னை ஏற்றுக்கொள்ளுங்கள் அல்லது உங்கள் அம்பை எய்து கொன்றுவிட்டுப் போய்விடுங்கள்!” என்று முகுந்தை மன்றாடினாள்.

“இது தகாதது; நான் உடன்படமாட்டேன்” என்று உருக்குமாங்கதன் கூறிவிட்டுச் சென்றான்.

முகுந்தையின் காமம் கோபமாக மாறிவிட்டது. “என்னை ஏற்றுக்கொள்ள மறுத்த நீ, குட்டநோய்கொண்டு அலைக!” என்று சாபமிட்டு, முகந்தை போய்விட்டாள். உருக்குமாங்கதன் நாட்டுக்குத் திரும்பினான். கோபங்கொண்டு முகுந்தை திரும்பி வந்தாளேயன்றி, உருக்குமாங்கதன்மேல் அவள் வைத்த மோகம் தீரவில்லை. அவனை நினைத்து உருகியபடி இருந்தாள்.

இந்தச் சம்பவங்களையெல்லாம் இந்திரன் நன்கு கவனித்துக்கொண்டிருந்தான். முகுந்தையின் அழகு பலகாலத்துக்கு முன்பே அவன் மனதில் இடம்பெற்றுவிட்டது. கவி முனிவரின் ஆசிரமத்திலிருக்கும் சுவைபடர்க் கனியைச் சுவைத்துவிட அவன் நெடுநாள் துடித்துக்கொண்டிருந்தான். உருக்குமாங்கதன் உதறித் தள்ளிப்போனதும், அவளை நினைத்து முகுந்தை உருகி நிற்பதும் இந்திரனுக்கு தன் ஆசையை நிறைவேற்றிக்கொள்ளும் வாய்ப்பைத் தந்தது. உருக்குமாங்கதனைப்போல உருவை மாற்றிக்கொண்டு, இந்திரன் முகுந்தை இருப்பிடத்துக்கருகில், மலர்க்கொடிகள் மறைந்த பொதும்பரில் அமர்ந்திருந்தான்.

ஆசிரமத்து மான் அந்தப்பக்கம் வந்தது. அதை இந்திரன் விரட்டினான். மான் மிரண்டோடி முகுந்தையிடம் போய்ச் சேர்ந்தது. மான் நடுக்கத்துடன் ஓடிவருவது, கலங்கி நிற்கும் முகுந்தைக்கு பழைய ஞாபகத்தைக் கிளரியது. உதறித்தள்ளிய மன்னன் மீண்டும் வேட்டைக்கு வந்தானோ என்ற சந்தேகம் வந்தது! ஓடிவந்தாள், சலசலப்புக் கேட்டிடும் மலர்ப்பொழிலை நோக்கி. காண்பது கனவோ? நனவோ? அவள் உள்ளங் கவர் கள்வன்—உருக்குமாங்கதன் அங்கே நிற்பது தெரிந்தது!

**(தொடரும்)**


**'மன்றம்' சந்தா விபரம்**

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | 6—0—0 | 7—8—0 |
| ஆறு திங்கள் ,, | 3—0—0 | |
| தனி இதழ் ,, | 0—4—0 | 0—5—0 |

# அறிவுடைமை ஒளி பெற

[ இரா. நெடுஞ்செழியன் ]

மனித சமுதாயத்தை நல்வாழ்வு படுத்துவதற்கான வழிவகைகள் என்ன என்பதைப் பற்றி ஆராய நாம் முற்பட்டிருக்கிறோம். மனித சமுதாய வளர்ச்சிக்கு எந்தவகையிலும் பயன்படாத பொய்மைகளையும், குருட்டுத்தனங்களையும், மூடத்தனங்களையும் விலக்கிவிட்டு, உண்மைகளைக் கண்டறியவேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படி உண்மைகளைக் காண முற்படும் நாம் நெஞ்சு உரத்தோடும், நேர்மைத் திறத்தோடும், நாணயப் பண்போடும் அணுக வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மனித சமுதாயத்தின் ஆக்கமும் ஆற்றலும் போர் புரிந்துகொள்வதால் பெரும்பகுதி அழிந்துபடுகின்றன என்பதை முன்பே கண்டோம். அது தவிர வேறோர் துறையினாலும் மனித சமுதாயத்தின் ஆக்கமும் ஆற்றலும், காட்டுமிராண்டிக் காலத்திலிருந்து தொடர்ந்து வீணாக்கப்பட்டுக்கொண்டே வருகின்றன. அதுதான் கடவுளின் உதவியை நாடும் துறையாகும். மனித வரலாற்றின் சாயல் தெரியத் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை கடவுளின் உதவியை—ஒத்துழைப்பைப் பெற, பலரும் பல்வேறு வழிகளிலும் பாடுபட்டுவருகின்றனர். ஐம்புலனறிவாலும், ஆறாவது அறிவாகிய சிந்தனையாலும் காணமுடியாத கடவுளைக் காணுவதற்கென்றும், அவருடைய உதவியைப் பெறுவதற்கென்றும் எடுக்கப்பட்ட முயற்சிகள், அளிக்கப்பட்ட தொண்டுகள், செலவழிக்கப்பட்ட செல்வங்கள், கழிக்கப்பட்ட காலங்கள், அம்மம்ம கணக்கிலடங்கா! அமெரிக்காவில் மட்டும் ஆண்டவன் கோவில்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் செல்வத்தின் மதிப்பு பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் நூறுகோடி டாலர்கள் இருக்கும். இந்தச் சொத்துக்களுக்குக் கிடைக்கக்கூடிய வட்டித்தொகை மட்டும் ஐந்துகோடி டாலர்கள் ஆகும். இந்தக் கோயில்களில் ஆண்டவன் உதவியைத் தேடிக்கொடுப்பதற்காக என்று அமர்த்தப்பட்ட குருமார்களுக்கும், புரோகிதர்களுக்கும் மட்டும் செலவழிக்கப்பட்ட பொருள் மேற்கொண்டு ஐந்துகோடி டாலர்கள் இருக்கும். ஆக வாரம் ஒன்றுக்கு இருபது லட்சம் டாலர்கள் ஆண்டவன் உதவியை நாடுவதன் பேரால் கோயில்களில் மட்டும் செலவழிக்கப்பட்டன. நாள் ஒன்றுக்குப் பத்துமணிநேர வேலை என்று கணக்கிட்டுக்கொண்டால், ஒவ்வொரு நிமிடத்திற்கும் ஐந்நூறு டாலர்கள் செலவழிக்கப்பட்டன என்று பொருள்.

இவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட பலன் மிகமிகக் குறைவாகும். அதுவும் மனித முயற்சியினால் ஏற்பட்ட பலனே ஒழிய, ஆண்டவன் ஆற்றலால் விளைந்தது அல்ல. இதுபோன்றே உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் ஆண்டவன் பேரால் செலவழிக்கப்பட்டு வரும் பொருளும், ஆற்றலும், நேரமும், நினைப்பும் ஏராளமாகும்; ஆனால் அவைகளின் மூலம் கிடைக்கும் பலன் மிகமிகக் குறைவாகத்தானிருக்கிறது. கோயில்களின் மூலம் அறச் செயல்கள் ஆங்காங்கு பலப்பல நடந்தேறுகின்றனவே என்று கூறப்படுகின்றதென்றால், ஆண்டவன் ஆற்றலைப் பற்றி வைதீகர்கள் கூறிவைத்திருக்கிற முறையில் கணக்கிட்டுப் பார்த்தால், ஏற்படும் பலன் மிகமிகச் சொற்பம் என்றுதான் கூறவேண்டும். இத்துணைக் காலமாக ஆண்டவனுக்கு வந்தனை வழிபாடு தூபதீப நைவேத்தியங்கள் செய்து, அவனுடைய உதவியைப் பலகாலமும் பெற முயன்றும் குற்றங்கள் குறைந்தனவா? கொடுமைகள் தொலைந்தனவா?—பஞ்சம் பசி பட்டினி வறுமை ஏழ்மை அகன்றனவா?—தீயொழுக்கங்கள் தீர்ந்தனவா! என்றால், இல்லை என்ற விடையைத்தான் நடைமுறை உலகில் காணமுடிகிறது! ஆண்டவனின் தயவு இந்தக் குறைபாடுகளைப்

போக்க எந்த அளவுக்குப் பயன்பட்டது—பயன்படுகிறது? எள்ளளவும் இல்லை என்ற நிலையைத்தான் காணமுடியும்! அப்படியிருந்தும் ஆண்டவனின் உதவியைப் பெறுவதற்கென்று கோடானுகோடி டாலர்கள், பவுன்கள், வெள்ளிகள் ரூபாய்கள் உலகெங்கணும் செலவழிக்கப்படுகின்றன!

ஆண்டவனை வழிபடுவதற்கு என்று அமைக்கப்பட்டிருக்கும் கோயில்கள், வாரத்தில் பெரும்பாலான நாட்கள் திறக்கப்படுவதே இல்லை. ஞாயிற்றுக்கிழமை மட்டும் சிலமணி நேரம் மட்டுமே திறந்துவைக்கப்படும் கோயில்கள் ஏராளம் இருக்கின்றன. அவற்றில் பல வானுயர்ந்த கோபுரங்களையும், அகன்ற உள்ளிடங்களையும், பெரியபெரிய மண்டபங்களையும், பரந்த புறவெளிகளையும் கொண்டிருக்கின்றன. கோயில்களையும், கோயில்களை நடத்திச் செல்லும் அமைப்புகளையும் அடியோடு அழித்துவிடவேண்டும் என்று நாம் சொல்ல வரவில்லை. அவைகள் மனித சமுதாயத்திற்கு உண்மையான முன்னேற்றத்தை அளிக்கக்கூடிய முறையில், பெரும்வகையில் பயன்படுத்தப்படவேண்டும் என்பதுதான் நமது விருப்பம். பொதுவாக மூவாயிரம் நாலாயிரம் மக்கள் கொண்ட சிறுசிறு ஊர்களிலெல்லாம்கூட, ஒரே சமயத்தின் அடிப்படையில் நான்கு, ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட கோயில்கள் இருக்கின்றன. பல்வேறு சமயத்தைச் சார்ந்தவர்கள் வாழும் ஊர் அல்லது நகரம் என்றால், சமயங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கோயில்களின் எண்ணிக்கையும் பெருகிக் காணப்படுகின்றன. ஒரே சமயத்தைச் சார்ந்தனவாக எழுப்பப்பட்ட கோயில்கள், எழுந்தருளும் ஆண்டவன்—வழிகாட்டி—தூதுவர்—மகான் ஆகியோரின் வேறுபாடுகள் காரணமாகவும், செய்யப்படும் வந்தனை, வழிபாடு, தூபதீபநைவேத்தியம், திருவிழா ஆகியவற்றின் வேறுபாடுகள் காரணமாகவும், பின்பற்றும் சடங்குகள், சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள், குறிக்கோள்கள், கோட்பாடுகள் ஆகியவற்றின் வேறுபாடுகள் காரணமாகவும் பலவாகப் பிரிந்திருக்கின்றன. ஒரு கோயிலுக்கும் மற்றொரு கோயிலுக்கும் உள்ள வேறுபாடுகளை உணர்த்தி, ஒரு கோயிலைச் சார்ந்தோர் தம் கோயிலே எல்லாவகையிலும் ஏற்றது என்பதற்கான காரணங்களை ஒவ்வொரு சாராரும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கூறிவருகின்றனர். இந்த வேறுபாடுகள் அனைத்தும் சண்டைக்கும் சச்சரவிற்கும், சூதுக்கும் கொலைக்கும், கொள்ளைக்கும் கொடுமைக்கும், அழிவுக்கும் அல்லலுக்கும் காரணமாகியிருந்துவந்திருக்கின்றனவே யல்லாமல், உருப்படியான நல்ல ஏற்றத்தை மனித சமுதாயத்திற்கு அளிக்கப் பயன்படவில்லை. ஒவ்வொரு விதமான கோயிலும் தனித்தனியாக நின்று நிலவுவதற்கான காரணங்கள், அவ்வவைகளால் திரும்பத் திரும்பப் பெருமைப்படக் கூறப்படுகின்றன. எல்லாம் கவைக்குதவாப் பழைய காரணங்கள்தாம்; திரும்பத் திரும்பச் சொல்லப்படுகின்றன.

என்னைக் கேட்டால் நான்கு அல்லது ஐந்து ஆயிரம் மக்கள் கொண்ட ஒரு ஊருக்கு ஒரு கோயில் போதுமானது என்பேன். அந்தக் கோயிலும் மக்களுக்கு ஞாயிற்றுக்கிழமையோ அல்லது சனிக்கிழமையோ அல்லது வெள்ளிக்கிழமையோ ஒருநாள் மட்டுமே பயன்படும் ஒன்றாக இல்லாமல், வாரத்திலுள்ள எல்லா நாட்களுக்கும் பயன்படுவதாக இருக்கவேண்டும். அளவுக்குமேல் தேவையை மீறி இருக்கும் கோயில்களெல்லாம், பள்ளிக்கூடங்களாகவும், மருத்துவ விடுதிகளாகவும், தாய்மை—குழந்தை பாதுகாப்பு மனைகளாகவும், பொது நல விடுதிகளாகவும், திக்கற்றோரின் இல்லங்களாகவும், முதுமையாளரின் பாதுகாப்புக் கூடங்களாகவும், ஏழை மாணவர்களின் உறைவிடங்களாகவும் மாற்றப்படலாம். கோயிலில், அந்தந்தச் சிற்றூருக்கோ அல்லது அந்தந்த நகருக்கோ பயன்படக்கூடியதான பொது நூல் நிலையத்தை ஒரு மண்டபத்தில் நிறுவலாம். பொதுமக்கள் மன்றம் கூடுவதற்கான முறையில் ஒரு மண்டபத்தை ஒதுக்கலாம். முக்கியமான செய்தித்தாள்களையும், கருத்திதழ்களையும், வார—இரண்டுவார—திங்கள் வெளியீடுகளையும் பொதுமக்கள் அன்றாடம் காணுவதற்கான வகையில் படிப்பகம் ஒன்றினை ஒரு மண்டபத்தில் அமைக்கலாம். குழந்தைகளும் பெரியோர்களும் விளையாடுவதற்கான விளையாட்டு இடங்களை ஒருபக்கம் நிறுவனம் செய்யலாம்; இசையரங்கமும், இசைப்பயிற்சிக்கூடமும் வேறோர் பக்கம் ஏற்படுத்தலாம். மக்கள் எப்பொழுதெல்லாம் கோயிலில் கூட விரும்புகிறார்களோ அப்பொழுதெல்லாம் கூடுவதற்கான முறையில் வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும். பெண்கள் தங்கள் ஓய்வு நேரத்தில் பொழுதுபோக்காக வலை நெய்வதற்கும், தையல் தைப்பதற்கும் கோயிலில் வசதிகள் செய்யப்படவேண்டும். சூதுக்கும் தீமைக்கும் காரணமாகாத வகையில் பந்துவிளையாட்டுக்களும், சதுரங்க விளையாட்டும், சீட்டுவிளையாட்டும் நடைபெறுவதற்கு இடங்கள் ஒதுக்கலாம். ஒவ்வொருவரும் எதை எதை தீமை பயக்காத

—இன்பமூட்டும்—பயன் தரத்தக்க பொழுது போக்குகளாகக் கருதுகிறார்களோ, அதை அதை அங்கு பெறவேண்டும். கண்ணைக் கவரும் அழகான உயர்தரமான பதுமைகள், சிலைகள், சிற்பங்கள் கோயிலிலே நிலைநாட்டப் படவேண்டும். கோயிற் சுவர்களிலெல்லாம் உயர்ந்த சிறந்த நேர்த்தியான படங்கள் மாட்டப்படவேண்டும். பொதுவாகக் கோயில்கள் அழகுதரும், அன்பு பயக்கும், அறிவு வளர்க்கும், இன்பம் பயக்கும், ஏற்றம் கொடுக்கும், ஆக்கம் விளைவிக்கும் ஒரு பெரும் கூடங்களாக விளங்கவேண்டும். அறிவும் ஆற்றலும், பண்பும் ஒழுக்கமும் நிறைந்த சான்றோர்களைக் கொண்டு ஞாயிறுதோறும் பொதுமக்களுக்கு அறிவுரை கூறச்செய்யலாம். உள்ளபடியே பொதுமக்களுக்குத் தேவையானதும், சுவை தருவதும், பயன் விளைவிப்பதுமான பொருள்கள்பற்றிச் சான்றோரைக் கொண்டு விளக்கம் தரச் செய்யலாம். இப்பொழுது பெரும்பாலான கோயில்களில் இருந்துவரும் பழக்கமான தேவையற்ற பழங்கற்பனைக் கதைகளிலும், வேண்டப்படாத மூடக் கருத்துக்களிலும் நம்பிக்கைகொள்ளச் செய்யும் பழக்கத்தை அறவே நீக்கவேண்டும். கோயில்களில் நியமிக்கப்படும் சான்றோர்களிடத்தில் பொதுமக்கள் கேட்டுக்கொள்ளவேண்டியது: "நாங்கள் வாரம் முழுவதும் பல்வேறு வேலைகளில் ஈடுபட்டிருக்கிறோம்; நாங்கள் வாணிகத்திலும், விவசாயத்திலும், பல்வேறு தொழில் துறைகளிலும் ஈடுபட்டிருக்கும்போது, நீங்கள் படிப்பிலும் ஆராய்ச்சியிலும் கவனம் செலுத்த வேண்டும்; ஞாயிற்றுக்கிழமையன்று நீங்கள் கண்டறிந்தவைகளிலே பயனுள்ளவை—சுவை தருபவை—இன்பம் பயப்பவை பற்றி எங்களுக்குச் சொல்லவேண்டும்" என்பதாகத் தான இருக்கவேண்டும்.

கோயிலில் நியமிக்கப்படும் சான்றோர் கிரேக்க நாட்டின் அறிவுவளர்ச்சி, கவின் கலைகள், இலக்கியம், தத்துவம், வரலாறு ஆகியவை பற்றித் தொடர்ச்சியாக பல சொற்பொழிவுகள் ஞாயிறுதோறும் ஆற்றலாம். அவர் ஒவ்வொரு நாட்டிலும் ஒழுக்கமுறைகள், பழக்க வழக்கங்கள், சமயக் கருத்துக்கள் முதலியன எப்படி வேடிக்கையானவையாகும், வியப்புக்குரியனவாகவும் இருக்கின்றன என்பதை வரலாற்று முறையில் விளக்கிக்காட்டலாம். அவர் உலகில் வாழ்ந்து ஓங்குபுகழ் எய்திய பெரும் தத்துவாசிரியர்கள், சிறந்த சிந்தனையாளர்கள், மாபெரும் கவிஞர்கள், மிகப்பெரிய கலைவாணர்கள், மிகச்சிறந்த நடிகர்கள், மாபெருஞ் சொற்பொழிவாளர்கள், மிகச் சீரிய கண்டுபிடிப்பாளர்கள், மிகச்சிறந்த தொழில்துறை வல்லுநர்கள், முன்னேற்றத்தின் வெற்றி வீரர்கள், அறிவியல் அறிஞர்கள் ஆகியவர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் பொதுமக்களுக்கு ஞாயிறுதோறும் அறிமுகப் படுத்திவைத்து, மக்களுக்கு உணர்ச்சியும் ஊக்கமும் அளிக்கலாம். அவர் குழந்தைகள் இயற்கைவியல். மரவியல், உயிரியல், விலங்கியல், நிலவியல், மனிதவியல், வானவியல் ஆகியவைபற்றிய" உண்மைகளை அறிந்து கொள்ளும் வகையில் 'ஞாயிறு பள்ளி'கள் வைத்து நடத்தலாம்.

அவர் குழந்தைகள் உலகின் போற்றுதற்குரிய மிகச்சிறந்த கவிதைகளோடும், மிக உயர்ந்த இலக்கியக் கருத்துக்களோடும், வீரம் பொருந்திய வரலாற்றுக் கதைகளோடும், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரின் வரலாற்றுக்களோடும், வள்ளல்களின் வாழ்க்கை பற்றிய குறிப்புகளோடும் நெருங்கிய தொடர்பு கொள்ளும்படி செய்வதோடு, அவைகளைப் பற்றியெல்லாம் மிகமிக நன்றாகத், தெளிவாக எளிதாக அறிந்துகொண்டவர்களாகச் செய்யவும் ஆன வழிகளிலெல்லாம் முயலலாம். அப்படிப்பட்ட கூட்டங்களில் கலந்துகொள்வதன்மூலம், ஒவ்வொரு நாட்டிலும், மிகப்பலர் பேரறிவாளர்களாக மாறக்கூடும்.

உண்மை என்னவென்றாலும், மிகப்பழைய—கவைக்குதவாத—கற்பனைக் கதைகளையும் கற்பனைக் கருத்துக்களையும் திரும்பத் திரும்பக் கேட்டுப் பெரும்பாலான மக்களின் செவிகள் மிகவும் புளித்துப்போய் இருக்கின்றன. அதிசயம்பற்றிய செய்திகளிலும், இயற்கைக்கு மீறிய ஆற்றல் பற்றிய செய்திகளிலும் மக்களுக்கு இருந்த நம்பிக்கை சிறிது சிறிதாகத் தேய்ந்துகொண்டிருக்கிறது. சிறிதும் நம்புவதற்கு ஏதுவில்லாத கருத்துக்களில் விருப்பம் செலுத்தும் பழக்கத்தைப் பெரும்பாலான மக்கள் சிறிதுசிறிதாக விட்டுக்கொண்டு வருகின்றனர்.

'அறியாமையைக்காட்டிலும் வேறோர் இருள் இருக்கமுடியாது.'

'அறிவுடைமையைக் காட்டிலும் வேறோர் சீரிய ஒளி இருக்கமுடியாது.'

இந்த உண்மைகளை மனித சமுதாயம் நன்கு உணரத்தொடங்கிவிட்டது.

வாழ்க்கையில் தென்படும் ஒவ்வொரு தவற்றையும் நம்மால் முடிந்த அளவுக்கு நீக்கிவிட்டு அந்த இடத்தில் ஏற்ற உண்மைக் கருத்தைக் கொள்ளத் தலைப்பட்டால், ஒவ்வொரு பொ

யையும் கூடுமான அளவுக்கு அகற்றிவிட்டு அந்த இடத்தில் உண்மையை நிலைநாட்டிக் கொள்ள முற்பட்டால், நாம் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்தவர்கள் ஆவோம். இந்தவழியில் நமது வாழ்க்கை ஈடேறிச் செல்லுமேயானால், நாம் உலகின் அறிவுச் செல்வத்தையும் பெருவகையில் பெருக்கியவர் களாவோம். இந்த வழியில்தான், இந்த வழி யில் மட்டுமேதான், நாம் மனித இனத்தின் எதிர்கால வளத்தையும், வாழ்வையும்—எதிர் கால நாகரிகத்தையும் உருவாக்கிச் செல்ல முடியும்.

நாம் யாரையும் குற்றங் கூறவேண்டும் என் பதற்காகக் குற்றங்கூற முற்படவில்லை; யாரு டைய நோக்கத்தையும் குறை சொல்லவேண் டும் என்பதற்காகக் குறைசொல்ல முன்வர வில்லை. நமது உள்ளத்திற்கும் அறிவு ஆராய்ச்சிக்கும் எது உண்மை என்று படு கிறதோ, அதனை அப்படியே எடுத்து வைக் கிறோம்.

நிகழ்கால அறிவுடைமையின் அடிப்படை யில்தான், எதிர்கால நம்பிக்கை கட்டப்பட வேண்டும். மனிதன் தன் ஆற்றலுக்கு உட் பட்ட வளத்தையெல்லாம் பயன்படுத்தவேண் டும். இல்லாதவற்றின்—நடைபெறமுடியாத வற்றின் உதவியைப் பெற, அவன் தன் ஆற் றல்களையெல்லாம் பாழ்படுத்தக்கூடாது.

இயற்கையில் காணப்படும் ஆற்றல்களை யெல்லாம் எந்தெந்த வகையில் நலனுக்காகப் பயன்படுத்தமுடியுமோ, அந்தந்த வகையி லெல்லாம் பயன்படுத்த மனிதன் முற்பட வேண்டும். புலனறிவுகளைப் பயன்படுத்துவ தன் மூலமும், இயற்கையைப் பார்ப்பதன் மூலம், பகுத்தறிவதன்மூலமும், ஆராய்ச்சி செய்வதன் மூலமும் எவை எவை வாழ்க் கைக்கு உறுதுணை பயப்பன என்று உறுதி செய்துகொள்ளப்படுமோ, அவற்றைப் புகட் டக்கூடிய கல்வியில் மனிதன் தன் முழுநோக் கத்தையும் செலுத்தவேண்டும், மூடப்பழக்க வழக்கம், குருட்டு நம்பிக்கை என்னும் சங்கிலித் தொடர்களை அவன் உடைத்தெறியவேண்டும். எல்லாவித பிரச்சினைகளைப்பற்றியும் தன் கருத் துக்களை வெளியிடுவதற்கு ஏற்றவண்ணம், அவன் தன் விருப்பமுடையவனாக இருக்க வேண்டும். மகிழ்ச்சிக்குரிய வழிகளிலே அவ னுக்கு உறுதிப்பாடு ஏற்படவேண்டும்; அத் தகைய வழிகளோடு ஒட்டி உறவாடுதற்கு ஏற்றவகையில், அவன் அறிவுடையவனாகவும் திகழவேண்டும்!

●●

# கடன் தொல்லை

வக்கீலைத் தேடி, மளிகைக்கடை வியாபாரி வந்தார்.

“என் மிகச் சோர்வாக இருக்கிறீர்கள்?” என்று வக்கீல் கேட்டார்.

“ஒரு கடன் விவகாரம்!” என்று வியாபாரி ஆரம்பித்தார்,

புதிய வழக்கொன்று வந்துவிட்டதென்று வக்கீல் குதூகலமடைந்தார். வியாபாரம் மந்த மடைந்து, கடன் வாங்கிய பல வியாபாரிகள் திரும்பக் கொடுக்கமுடியாமல் அவதிப்படுவது அவருக்குத் தெரியும். அவர் வியாபாரியை உற்சாகமூட்டினார். “ஒன்றுக்கும் பயப்படாதீர்கள்! கடன் வாங்கிவிட்டதாலேயே. உங்களை கடன் கொடுத்தவன் ஒன்றும் செய்துவிட முடியாது. கடைபேரிலேயோ, வீட்டின்பேரிலோ வரமுடியாதபடி நான் பார்த்துக்கொள்ளுகிறேன். இரண்டு நாளைக்கு முன்தான் உங்களுடைய பக்கத்துக்கடை பக்கிரிசாமி ஆயிரம் ரூபாய் கடன் யாரிடமோ, வாங்கியதாகவும், அதன் கெடு முடிந்துவிட்டதென்றும் நடுங்கிக்கொண்டிருந் தான்.”

“அவனுக்கு நீங்கள் என்ன சொன்னீர்கள்?”

“பயப்படாதே! கடன் வாங்குவதும் கொடுப்பதும் சகஜம். சொன்ன தேதியில் கொடுக்கமுடியாவிட்டால், கொஞ்சம் ஒத்திப்போட்டுக்கொள்ளச்சொல். தலையா போய்விடும். ஏதாவது வழக்கு வந்தால் நான் பார்த்துக்கொள்ளுகிறேன் என்று தைரியமூட்டி அனுப்பி னேன். அதற்கப்புறம் அவன் கவலையை விட்டு இப்பொழுது பழையபடி இருக்கிறான்” என்று தன் திறமையை வக்கீல் வெளியிட்டார்.

வியாபாரி எழுந்துநின்று, “நீங்கள்தான் அவனுக்கு அபூர்வ யோசனைகளைச் சொன் னதா? அவனுக்கு ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்தது நான்தான், ஐயா!” என்றார்.

# அன்புச் செறிவும் செல்வச் செழிப்பும்

[எழினி]

திருமணம் நடந்தேறுகிறது காதலனும் காதலியும் இன்பத்துறையில் மூழ்கி எழுந்து நீந்தி விளையாடுகின்றனர். ஒரே மகிழ்ச்சி!... ஒரே இன்பம்!...

தனிமனை! எனவே ஆடியும் பாடியும், கூடியும் குலாவியும் மகிழ்வதற்கேற்ற வகையில் புதுவாழ்வு அமைந்துவிடுகிறது. களவொழுக்கத்தின்போது காணப்பட்ட இடர்ப்பாடுகளெல்லாம் காற்றாய்ப் பறந்துபோய்விடுகின்றன. சீறி எழும் தந்தையும், கையைப் பிசைந்துகொண்டு கண்ணீர் விடும் தாயும், கடிந்துரைக்கும் செவிலியும், அலர் தூற்றும் ஊராரும் இப்பொழுது இல்லை. தொல்லையும் துன்பமும் தவிர்ந்த—தம் விருப்பம்போல் காதல் விளையாட்டு புரியும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஒருவரையொருவர் எதிர்பார்த்து வாழ்ந்த களவொழுக்கத்தின்போது பொழுது எவ்வளவுக்கெவ்வளவு நீடித்ததாகக் காணப்பட்டதோ, அந்தப் பொழுது இதுபோது அவ்வளவுக்கவ்வளவு குறைந்ததாகக் காணப்படுகிறது. மகிழ்ச்சிப் பெருக்கில் பொழுதுபோவதே அவர்களுக்குத் தெரிவதில்லை. புற உலக நிகழ்ச்சிகளும் அவர்கள் கண்களுக்குப் புலப்படுவதேயில்லை.

இளங் காதலர்களோ அன்புப் பெருக்கத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்; அவர்களின் பொருள் பெருக்கமோ நாளுக்கு நாள் குறைந்துகொண்டு வருகிறது. வளம் குறைகிறது; அதனால் வசதிகள் குறைகின்றன; வாழ்வின்பத்திற்கான வகையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக குறைகின்றன; பொங்கிய மகிழ்ச்சியும் நாளுக்குநாள் வடியத் தொடங்குகிறது. காதலனுக்குக் கவலை மேலிடுகிறது; பொருள் தேடும் முயற்சியில் எண்ணத்தைச் செலவிடவேண்டியவனாகிறான்.

பொருள் பெருக்கம் இன்பப்பெருக்கத்திற்கு உறுதுணையாக நிற்பதாகும், வறுமை இன்பத்தை அழித்துவிடும்—என்பதை அவன் உணர்ந்திருக்கிறானாதலால், நெடுந்தொலைவு சென்று பெரும்பொருள் ஈட்டிவர எண்ணுகிறான். காதலன் தன் எண்ணத்தைக் காதலியிடம் வெளியிடுகிறான். அவளோ அருமைக் காதலனை விட்டுப் பிரிய நேரிடுகிறதே என்று எண்ணி மனங்கலங்குகிறாள். பொருள் தேட வேண்டியதன் இன்றியமையாமையை அவளுக்கு உணர்த்தி, விரைவில் திரும்பி வந்துவிடுவேன் என்று சொல்லி, அவளைவிட்டுப் பிரிந்து செல்கிறான்.

தலைவன் பொருள்தேடப் புறப்பட்டிருப்பது நல்ல கோடைகாலம். வெய்யலின் கொடுமையையும் பாராமல், பாலைவெளியின் இடர்களையும் எண்ணாமல், பொருள்திரட்டவேண்டும் என்ற பெரு முனைப்போடு நீண்ட தொலைவு சென்றுவிடுகிறான்.

தலைவி பிரிவாற்றாமையால் வருந்துகிறாள்; பொருள் இல்லாமல் வாழ்வு இன்பகரமாக இருக்காதே என்பதை எண்ணி தன்னைத் தானே ஆறுதல்படுத்திக்கொள்கிறாள்.

தலைவன் திரும்பிவருவதாகக் குறிப்பிட்டிருந்த காலம் வந்தும், தலைவன் வராமை கண்டு தலைவி பெரிதும் கலங்குகிறாள். காதலர், தன்னைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் தன்னை ஏமாற்றிவிட்டாரே என்று எண்ணி ஏங்குகிறாள். வருத்தம் அவள் உள்ளத்தைக் கப்பிக்கொள்கிறது. அவள் தன்னை அழகுபடுத்திக்கொள்ளாமல், நல்ல ஆடை அணிகலன்களைத் துறந்து, ஓயாமல் அழுத கண்ணீரோடு காட்சியளிக்கிறாள்.

ஒருநாள் தலைவியைக் காண தோழி வருகிறாள். பிரிவாற்றாமையால் வருந்திக்கொண்

திருக்கும் தலைவியின் அவல நிலையைக் கண்டு இரங்கி, அவளை எப்படியேனும் தேற்றுவிக்க வேண்டும் என்று தோழி முயலுகிறாள்.

"ஏன் இப்படி ஓயாமல் அழுதுகொண்டிருக்கிறாய்? இப்படி அழுதுகொண்டிருந்தால் உன் உடம்பு என்னதற்காகும்" என்று தோழி தலைவியைக் கேட்கிறாள்.

அதுகேட்ட தலைவி "அந்தக் கவலை உனக்கிருக்கிறது! ஆனால் அவருக்கல்லவா இருந்திருக்கவேண்டும்!" என்று தழதழத்த குரலில் விடைபகர்கிறாள்.

"உன்னிடம் அன்பு செலுத்தி, உன்னோடு இன்பவாழ்வு நடத்துவதற்கு ஏதுவாக இருக்கும்பொருட்டுத்தானே பொருள்தேடச் சென்றுள்ளார்!" என்று தோழி கூறுகிறாள்.

"அவர் பொருள்தேடச் சென்றிருப்பதை நான் குறை கூறவில்லையே! விரைவில் திரும்பி விடுகிறேன் என்று சொல்லிவிட்டுப் பொருள் தேடச் சென்றவர், இன்னமும் வரவில்லையே என்பதுதான் எனக்கு வருத்தத்தை அளிக்கிறது!" என்று தலைவி சொல்லுகிறாள்.

"போதுமான பொருள் திரட்டியபிறகு தானேடி அவர் வரமுடியும்! அதற்குள் நீ அவசரப்பட்டால், அவர்தான் என்ன செய்வாரடி?"

"தோழி! நீ சொல்லுவதையும் ஒப்புக்கொள்கிறேன், ஆனால் பொருள்தேடும் முயற்சிக்கும் ஒரு காலவரையறை, ஒரு அளவு வேண்டாமா?"

"முயற்சி நன்கு முடியவேண்டும் என்ற எண்ணத்தில் இருப்பாரா? அல்லது நீ கூறுகிறபடி முயற்சியை ஒரு அளவோடு நிறுத்திக் கொள்வாரா? உனக்கு என்ன பைத்தியமா?"

"முயற்சியை அரைகுறையாக நிறுத்திவிட வேண்டும் என்றல்லடி நான் சொல்வது. நானும் அவரும் வாழ்க்கையில் பெருக்கிவரும் அன்பை, அவரது பொருள்தேடும் முயற்சி பாழ்படுத்திவிடக்கூடாதல்லவா! அன்பெல்லாம கெட்டொழிந்ததற்குப் பிறகு பொருள் வந்தாலென்ன, வராவிட்டால்தான் என்ன? எல்லாம் ஒன்றுதான்! அன்பிற்குப் பழுதில்லாதவகையில் பொருள்தேடும் முயற்சி அளவோடு இருக்கவேண்டும் என்றுதான் நான் சொல்லுகிறேன்!"

"உன் வாழ்க்கையில் அன்பைப் பெருக்க வேண்டும் என்பதற்குத்தானே அவர் பொருள் தேடப் புறப்பட்டிருக்கிறார்! அவர் எவ்வளவுக்கெவ்வளவு மிகவான பொருள் திரட்டிவருகிறாரோ, அவ்வளவுக் கவ்வளவு உன்னிடம் கொண்டுள்ள அன்பைப் பெருக்கத்தானே பயன்படும்?"

"நீ உலக இயல்பை அறியவில்லையடி! நீ மருந்துக்குரிய மரத்திலிருந்து பட்டை, வேர், பூ, இலை ஆகியவற்றைக் கொள்வோரைப் பார்த்திருக்கிறாயல்லவா?"

"பார்த்திருக்கிறேன்! அதற்கென்னடி இப்போது?"

"மரத்திலிருந்து பட்டை, வேர், பூ, இலை ஆகியவற்றைக் கொள்வோர், அந்த மரம் பட்டுப்போகும் வகையிலா கொள்ளுகிறார்கள்?"

"இல்லை!"

"உயர்ந்தது என்று எல்லோராலும் சொல்லப்படும் தவமுயற்சியை மேற்கொள்வோரை நீதான் பார்த்திருக்கிறாயே! அவர்கள் தம் உடலின் வலிமை குன்றிவிடும் அளவுக்கா தவ முயற்சியை மேற்கொள்கின்றனர்?"

"இல்லை!"

"குடிமக்களிடமிருந்து வரிப்பணத்தைக் கொள்ளும் அரசர்கள், குடிமக்களின் செல்வ வளங்கெட்டுப்போகும் அளவுக்கா வரிப்பணம் வாங்குகிறார்கள்?"

"இல்லை!"

"அந்த முயற்சிகளுக்கெல்லாம் எப்படி ஒரு அளவு இருக்கிறதோ, அப்படித்தானடி காதலரின் முயற்சிக்கும் ஒரு அளவு இருக்கிறது!"

"எப்படியடி?"

"எப்படி என்று கேட்கிறாய்? மரத்திலிருந்து மருந்துக்குரிய பட்டை, வேர், பூ, இலை முதலியனகொள்வோர், எப்படி அந்த மரம் பட்டுப்போகும் அளவுக்குக் கொள்ளமாட்டார்களோ, உயர்ந்தது என்று கருதப்படும் தவமுயற்சி ஒன்றினை மேற்கொள்வோர், எப்படித் தம் உடல் வலிமை குன்றிவிடும் அளவுக்கு மேற்கொள்ளமாட்டார்களோ, குடிமக்களிடமிருந்து வரி வசூலிக்கும் மன்னர்கள் எப்படிக் குடிமக்களின் செல்வமெல்லாம் கெட்டுப்போகும் அளவுக்கு வசூலிக்கமாட்டார்களோ, அப்படியே என் வாழ்க்கையில் பெருக்க நினைக்கும் அன்பினை அடிப்படையாகக்கொண்டுபொருள் தேட ஏற்பட்டிருக்கும் என் காதலரும், அந்த அன்பிற்குப் பழுது ஏற்படாதவகையில் பொருள் தேடும் முயற்சியில் ஈடுபடவேண்டும்

என்கிறேன். ஆனால் என் காதலரோ அப்ப டிப்பொருள் ஈட்டும் அளவினை அறியாதவ ராக இருக்கிறார்!''

"உன்னிடம் கொண்டுள்ள அன்புக்குப் பழுது ஏற்படும் வகையில் அவர் நடந்து கொள்கிறார் என்று நீ எப்படித் துணிந்து கூறுகிறாய்?''

"இவ்வளவு காலம் கடத்திச் செல்வது ஒன்றே போதுமே, அவர் என்னிடம் அன்பு கொள்ளவில்லை என்பதற்கு! அவர் என்னைக் காட்டிலும் பொருளிடத்தில்தான் மிக அன்பு கொண்டிருக்கிறார் என்பதுதான் வெளிப்படை யாகத் தெரிகிறதே!''

"அவர் காலந் தாழ்த்துவதற்குப் பெருங் காற்றும், பெருமழையும், வழியில் ஏற்படும் இடையூறுகளும் காரணமாக இருந்தாலும் இருக்கலாமே!''

"அதெல்லாம் இல்லையடி! இவ்வுலகி ஆடவர் பொருளையே முதன்மையாக நினைந்து அதன் காரணமான அன்புக்குப் பழுது ஏ படும் வகையில் பிரிந்து செல்வது அவர வழக்கம் என்றும், அன்பின் தன்மை அறிந்தொழுகாமையே அவரது இயல்பு எ றும் சான்றோர்கள் பலரும் கூறியிருக்கிறா களே! என் காதலர் மட்டும் அதற்கு எப்ப விதிவிலக்காக அமைந்துவிடுவார்?'' என் தலைவி வருந்தி இரங்கிக் கூறுகிறாள்.

தலைவி நிலைகண்டு தோழியும் உளங்கசிந் இரங்குகிறாள்.

ஃ ஃ ஃ

நற்றிணை 226-ம் செய்யுளை அடிப்படையாக கொண்டு தீட்டிக்காட்டப்பட்ட சொல்லோ வியமே மேலே காணப்படுவதாகும்.

**மரஞ்சா மருந்தும் கொள்ளார்; மாந்தர்**
**உரஞ்சாச் செய்யார் உயர்தவம்; வளங்கெடப்**
**பொன்னும் கொள்ளார் மன்னர்; நன்னுதல்!**
**நார்தம் உண்மையின் உளமே; அதனல்,**
**தாம்செய் பொருள்அள வறியார், தாம்கசிந்து**
**என்றூழ் நிறுப்ப நீளிடை ஒழியச்**
**சென்றோர் மன்றநம் காதலர்; என்றும்**
**இன்ப நிலைமைத் தென்ப;**
**என்னோரும் அறிபஇவ் வுலகத் தானே.**

—[நற்றிணை - 226]

[சா - சாக; சாகும்படி; உரம் - வன்மை; நன்னுதல் என்றது தோழியை விளித்தற் பொருட்டு; தம் உண்மையின் - அவர் பிரியாது உள்ளமையால்; உளம் - உயிரோடு உள்ளோம்; தாம் கசிந்து என்றூழ் நிறுப்ப நீள் இடை ஒழியச் சென்றோர் மன்ற நம் காதலர் - நம் காதலர் வெயில் நிலை கொள்ள நீண்ட வழி பின்னேபோக திண்ணமாகத் தாம் வருந்திப் பொருட் பிரி வில் சென்றவராயினர்; மன்ற - திண்ணமாக; என்றும் இன்ன நிலைமைத்து என்ப - ஆடவரி யற்கையே என்றும் இத்தன்மையதென்பர் சான்றோர்; என்றோரும் - எத்தகையோரும்; இவ்வுல கத்தான் - இவ்வுலகத்தில்.]

ஃ ஃ ஃ

தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவிக்கு ஆறுதல் மொழி கூறவந்த தோழியைப் பார்த்துத், தலைவி வருந்தி இரங்கிக்கூறிய கருத்துக்களே மேற்கண்ட செய்யுள் வடிவம் பெற்றுள்ளன.

இல்வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் தலைவன் பொருளீட்டும் முயற்சியில் மேற்கொள்ள வேண்டிய முறைமைப்பற்றிய அழகிய கருத்

ணை, இச்செய்யுள், தெளிவுபடுத்திக் காட்டுறது,

மருந்து கொள்வதற்கு மரமும், தவம் செய்தற்கு வலிமையும், வரி வசூலிப்பதற்குக் டிகளின் வளமும் காரணமாயிருத்தல்போல, செல்வம் பெருகுவதற்குத் தலைவனும் தலைவிம் தம் வாழ்க்கையில் செய்யும் அன்பே ாரணமாகின்றது என்பதைச் சுட்டிக்காட்டி, வ்வியல்பு அறிந்து அன்பிற்குப் பழுது நராதவகையில் அளவோடு பொருளுக்கு முயற்சிசெய்யவேண்டும் என்பதை உணர்த்தி ஆனால் தம் காதலர் அந்தப்படிக்குப் பொருட்டும் அளவினை அறியாதவராக இருக்கிறார் ன்பதைத் தெளிவுபடுத்தும் தலைவியின் ாங்கு நினைத்து நினைத்து மகிழ்வதற்குரிய ாகும்.

மருந்து சரக்கினை எப்பொழுதும் எடுத்துக் கொண்டிருக்க மருந்து மரம் பட்டுப்போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது எவ்வளவு இன்றியமையாததோ. தவமுயற்சியை அடிக்டி மேற்கொள்ள உடல்வலிமை பாழ்படாமல் ண்காணித்துக்கொள்ளவேண்டியது எவ்வவு இன்றியமையாததோ. தேவையான வரிப் ணத்தை எப்பொழுதும் வசூலிக்க குடிமக்களின் செல்வ வளம் குன்றாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவு இன்றியமையாதது, தலைவன் பொருளீட்டுவதற்குக் காரணமாக விளங்கும் தலைவியிடத்து அன்பும் ஆகும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. அதாவது முயற்சிக்கு அடிப்படையான காரணங்கள் கெடும்படி காரியங்கள் நடைபெறுவது நன்றல்ல என்ற சீரிய கருத்து தலைவியின் கூற்றால் வெளிப்படுத்தப்படுகிறது. தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியின் உள்ளம் எவ்வளவு நொந்துபோய் இருக்கிறது என்பதும், தலைவனிடம் எத்தகைய அன்பினைத் தலைவி எதிர்பார்க்கிறாள் என்பதும், தலைவன் நடந்துகொள்ளவேண்டிய பாங்கு என்ன என்பதும் உலகோர் அறிந்துகொள்ளவேண்டிய பேருண்மைகளாக இச்செய்யுளில் காணக் கிடக்கின்றன.

பொருள் முயற்சிக்குக் காரணமான காதலன்பு பட்டுப்போகாத வகையில், அதனைக் காப்பாற்றிவரவேண்டியது தலைவனின் கடமையாகும். காதலன்பின்மேல் வைத்த பற்றுதான், வெயிலின் வெம்மையையும், பாலை வெளியின் கொடுமையையும், இடையில் ஏற்படும் இடையூறுகளையும் பொருட்படுத்தாதவாறு காதலனைச் செய்வதோடு, காதலன் எடுத்த முயற்சியை எளிதாகச் செய்துமுடிக்கவும் உதவி செய்கிறது. அந்த இயல்பு இச்செய்யுளின் மூலம் நன்கு உணர்த்தப்படுகிறது.

பெண்டிரைப் பிரிந்து செல்லும் ஆடவர் அன்பின் தன்மையை அறிந்தொழுகாமற் போவது உலக இயற்கைதான் என்று சான்றோர் கூறுவதாகக் கூறித் தன் சலிப்பை வெளிப்படுத்திக்கொள்ளும் தலைவி, ஆடவரின் வன்மைத்தன்மையையும், பெண்டிரின மென்மைத்தன்மையையும் உணர்த்தாமல் உணர்த்துகிறாள் என்பதாகும்.

ஆடவரின் மனவளம் எப்படிப் பண்படுத்தப்படவேண்டும் என்பதை உணர்ந்து பயன்பெற இச்செய்யுள் பேருதவியாக இருக்கும். ●

## குட்டுப்பட்டாலும்

வால்டேரின் புகழ் ஐரோப்பாவெங்கும் பரவி உச்சநிலையில் இருந்த சமயத்தில், பிரஷிய நாட்டு மன்னன் பிரெடரிக் என்பவன் அவரைத் தன் தலைநகருக்கு வரவழைத்துக்கொண்டான். பிரஷிய மன்னனின் எண்ணம் தனது அரசவையில் பெரிய மேதைகள் கவிஞர்கள், கலைஞர்கள் முதலியோர் நிறைந்திருக்கவேண்டுமென்பதுதான். அந்தவகையில் வால்டேரும் பிரெடரிக்கின், வீண்பெருமைக்காக பெர்லின் நகரில் பாதுகாக்கப்பட்டார். ஆனால் வாள்பிடித்த வீரருக்கும் பேனா பிடித்த வீரருக்கும் உறவு அமைதியான்முறையில் நீடிக்கவில்லை, அடிக்கடி சண்டை சச்சரவுகள் மூண்டு, கடைசியில் இரவோடிரவாக வால்டேர் பெர்லின் நகரைவிட்டு ஓடிவிட்டார். ஆனால் பிரஷிய மன்னனின் ஆட்கள் அவரை பிராங்க்பர்ட் என்ற இடத்தில் பிடித்துவிட்டனர். வால்டேரின் சாமான்கள் பறிமுதல் செய்யப்பட்டு, அவரும் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த அவதியுறும் நிலையில், வால்டேரைத் தேடிக்கொண்டு ஒரு புத்தகவியாபாரி வந்து சேர்ந்தான். அவன் வால்டேருக்கு பணம்கொடுத்து முன்பு உதவியிருக்கிறான். அந்தப்பணத்தைத் திரும்பத் தருமாறு கேட்டுஇப்பொழுது தொல்லை செய்தான். வால்டேருக்குக் கோபம் பொறுக்கமுடியவில்லை. புத்தக வியாபாரியை அருகழைத்து, ஓங்கி ஒரு அறை கொடுத்தனுப்பினார். புத்தக வியாபாரி 'ஓ' வெனக் கூச்சலிட்டான்; அவமானந் தாங்கமுடியாதென அலறித் துடித்தான்.

வால்டேருக்குத் துணையாக வந்த காலினி என்பவர் புத்தக வியாபாரியைத் தனியே அழைத்துச்சென்று, "ஐயா! வருத்தப்படவேண்டாம்! உங்களுக்குக் கிடைத்த அறை உலக மேதைகளில் ஒருவர் கொடுத்ததாகும்!" என்று சமாதானப்படுத்தினார்.

# வினாவும் விளக்கமும்

**ஒரு பூணூல் அணியாத பார்ப்பனன் தன் பரம்பரையின் சனாதனக் கொள்கைகளை எதிர்த்து, அதேபோது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளை ஆதரித்தால் தி. மு. கவினர் அவனை முழுமனதோடு தங்கள் கழகத்தில் சேர்த்துக்கொள்வார்களா ?**

பார்ப்பனர்கள் பார்ப்பனச் சமூகத்தில் பிறந்துவிட்டார்கள் என்ற ஒரே காரணத்துக்காகவே அவர்களை வெறுத்தொதுக்கவேண்டும் என்ற நோக்கம் கொண்டதல்ல திராவிட முன்னேற்றக் கழகம் என்பது பலகாலும் தெளிவுபடுத்தப்பட்டு வந்துள்ளது. கழகம் பார்ப்பனியத்தைத்தான் வெறுக்கிறது. பார்ப்பனச் சமூகத்தில் பிறந்த ஒருவன், பார்ப்பனீயத்தை அறவே ஒதுக்கிவிட்டு, திராவிடநாட்டிற்குரிய திராவிடனாகத் தன்னைத் தயாராக்கிக் கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளை உள்ளன்போடு முழுக்க முழுக்க ஆதரிக்கிறான் என்றால், அத்தகையோனை உறுப்பினனாகச் சேர்த்துக்கொள்ள திராவிட முன்னேற்றக் கழகம் ஒருக்காலும் தயங்காது.

இந்த நாட்டுச் சமுதாயத்தில் உயர்வு தாழ்வு கற்பிக்கவும், உயர்சாதியாகிய பார்ப்பன சாதிக்கு ஏகபோக உரிமைகளையும், வசதிகளையும், வாய்ப்புக்களையும் சேர்ப்பிக்கவும், பார்ப்பன சாதியினரை ஆதிக்கம் செலுத்துவோராகவும் பிற சாதியினரை அடிமைப்படுத்துவோராகவும் ஆக்கவும், பார்ப்பன சாதியினரை வேறு பிரித்துக் காட்ட பூணூல்—பூணூலிலே மான்தோல் — உச்சிக்குடுமி — பஞ்சகக்சம்—தர்ப்பை—முக்கோல் முதலிய அடையாளங்களை நிலைநாட்டவும், சாதிக்கு சாதி நீதி வகுக்கவும், 'ஆண்டவனை'த் தொட—வந்தனை வழிபாடு செய்ய—'அவனு'க்கு தூபதீப நைவேத்தியம் காட்ட பார்ப்பனருக்கே உரிமையுண்டு என்று நிலைநாட்டிக் கொள்ளவும், சமஸ்கிருத மொழியே 'ஆண்டவன்' மொழி என்று கூறிடவும், அந்த மொழியில் ஏற்படுத்தப்பட்ட மந்திரங்களைப் பார்ப்பனரைக் கொண்டே சொல்லச் சொல்லி கலியாணம் கருமாதிச் சடங்குகளை ஒவ்வொருவரும் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தவும், ஆபாசக் கடவுட் புராணக் கதைகளைப் புகுத்தவும், இவைபோன்ற பல பழக்க வழக்கங்களை ஏற்படுத்தவும் 'பார்ப்பனீயம்' என்ற தத்துவம் அல்லது தன்மை முக்கியமான காரணமாக இருப்பதால்தான் திராவிட முன்னேற்றக் கழகம் 'பார்ப்பனீயத்'தை வெறுக்கிறது. அதனால்தான் அந்தப் பார்ப்பனீயம் யாரிடத்தில் காணப்பட்டாலும் அவர்களைக் கண்டிக்கவும், வெறுக்கவும், ஒதுக்கவும், திருத்தவும் கழகம் பாடுபடுகிறது. முதலியார், செட்டியார், நாய்க்கர், பிள்ளை, படையாச்சி, நாடார் கோனார் போன்றவர்களிடையே குடிகொண்டிருக்கும் 'பார்ப்பனீயத்'தைப் போக்கி, அவர்களைப் பகுத்தறிவாளர்களாக மாற்றுவதற்குக் கழகம் எந்தவகைகளிலெல்லாம் பாடுபடுகிறதோ, அதே வகைகளில் சற்று அதிகமான முயற்சியோடு பார்ப்பனரிடத்திலே குடிகொண்டிருக்கும் 'பார்ப்பனீயத்'தைப் போக்கி, அவர்களையும் பகுத்தறிவாளர்களாக மாற்றப் பாடுபடுகிறது. மற்ற சாதியினரிடம் குடியேறியிருக்கும் 'பார்ப்பனீயத்'தைக் காட்டிலும், பார்ப்பனரிடத்தில் சற்று மிகவாகவும்—அழுத்தமாகவும்—பிடிவாதமாகவும் 'பார்ப்பனீயம்' குடியேறியிருக்கும் காரணத்தால்தான், அவர்களைத் தனியே சுட்டிக்காட்டிக் குறிப்பிடவேண்டிய அவசியமும், சுட்டிக்காட்டிக் கண்டிக்கவேண்டிய அவசியமும் ஏற்படுகின்றன. 'பார்ப்பனீயத்'தை அறவே விட்டுவிட்டுப் பகுத்தறிவாளர்களாக மாறும் பார்ப்பன குலத்தில் பிறந்தவர்களைக் கழகம் வரவேற்கவே செய்யும்; அதே நிலையில் 'பார்ப்பனீயத்'தைக் கட்டிக்காக்கும் பார்ப்பனரல்லாதவர்களைக் கழகம் வெறுக்கவே செய்யும், திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளுக்கு ஒருசிறிதும் முரண்படாத வகையில், தூய உள்ளத்தோடு அதன் கொள்கைகளையெல்லாம் ஆதரிக்க ஒரு பார்ப்பனர் வருகிறார் என்றால், அதிலிருந்தே அவர் 'பார்ப்பனீயத்'தை அறவே விட்டுவிட்டவராவார் என்பது பெறப்படும். அப்படிப் பட்டவர்கள் தி. மு. கழகத்தில் உறுதியாகச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

○ ○ ○

**சீர்திருத்தக்காரர்கள் நடத்தும் சீர்திருத்தத் திருமணத்தில் அய்யர் ஒருவரை மட்டும் விலக்குகிறீர்களா? அல்லது சடங்குகள் எல்லாவற்றையும் விலக்குகிறீர்களா?**

காலத்திற்கேற்ற, கருத்துமிக்க, நடைமுறை உலகுக்கு ஒத்த, பகுத்தறிவுக்கு முரண்படாத முறைகளில் திருமணம் நடைபெறவேண்டும் என்றுதான் சீர்திருத்தக்காரர்கள் சொல்லுகிறார்கள். திருமணத்தில் மேற்கொள்ளப்படும் முறைகள் தாம் 'சடங்குகள்' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன என்றால், சடங்கே இல்லாமல் திருமணநிகழ்ச்சி யொன்று நடந்தேற வேண்டும் என்பது எண்ணிப்பார்க்க முடியாத தொன்றாகும். மூடப்பழக்க வழக்கத்தின் அடிப்படையிலும், குருட்டு நம்பிக்கையின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்படும் சடங்குகள் (முறைகள்) எல்லாம் அகற்றப்பட வேண்டும் என்றுதான் சீர்திருத்தக்காரர்கள் செப்புகிறார்கள். இந்தக்காலத்தில் மேற்கொள்ளப்படும் சில முறைகள், வருங்காலத்திற்கு ஏலாதனவாகவும், தேவையற்றனவாகவும் ஆகிவிடுமேயானால், அப்பொழுது அவைகள் அகற்றப்படவேண்டிதான் வரும்,

சீர்திருத்தத் திருமணம் என்ற பெயரால் நடத்தப்படும் சிலபல திருமணங்களில் சிலபல மூடச் சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றனவே, அவைகள் அத்திருமணங்களில் கலந்துகொள்ளும் சீர்திருத்தக்காரர்களுக்கு உடன்பாடுடையவைதாமா என்றால், இல்லை! மேற்கொள்ளப்படும் சீர்திருத்தம் கூடுமானவரையில் போற்றத்தகுந்ததாக அமையும் அளவிற்கே கலந்துகொள்ள ஒருப்படுவார்கள். போற்றத்தகுந்த சீர்திருத்தத்தைப் பாராட்டி வற்புறுத்தவும், அகற்றவேண்டிய மூடச் சடங்குகளைச் சுட்டிக்காட்டி அவைகளைத் திருத்தும்படி அறிவுறுத்தவுமே சீர்திருத்தக்காரர்கள் திருமணங்களில் கலந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

அய்யரை வைத்துத் திருமணம் செய்வது மூடச் சடங்குகளில் ஒன்றாக இருக்கும் காரணத்தால்தான், திருமணத்தை நடத்த அய்யரே வேண்டுமென்ற அவசியம் இல்லை என்று வற்புறுத்தப்படுகிறது. 'அய்யர்' திருமண வீட்டில் மூடச்சடங்கின் சின்னமாக மட்டுமல்லாமல், திருமணத்தை நடத்துவோர்க்கு அவமானத்தைத்தரும் அவமானச் சின்னமாகவும் விளங்குகிறார். திருமணம் நடத்துபவர்களை மனிதர்கள் என்று மதியாமல், மனிதனுக்கு மனிதன் காட்டவேண்டிய மரியாதையைக் காட்டாமல், திருமணம் நடத்துபவர்களைத் தொட—அவர்களோடு இருந்து உண்ண—அவர்களோடு இருக்க இசையாமல், தன்னை உயர்வாகவும் ஏனையோரை இழிவாகவும் கருதும் மனப்பான்மையோடு வரும் ஒருவனை—அய்யனைத் திருமணத்தை நடத்திவைக்கும்படிச் செய்வது பெருத்த அவமானகரமான செயல் என்று சீர்திருத்தக்காரர்கள் வற்புறுத்தவேண்டியிருக்கிறது. எனவேதான் மூடச் சடங்குகளிலே ஒன்றாயும், மூடச்சடங்குகளுக்கெல்லாம் ஒருபடி மேலாக அவமானச்சின்னமாகவும் விளங்கும் 'அய்யர்' திருமண நிகழ்ச்சியினின்றும் அகற்றப்படவேண்டும் என்றும் திருமணம் நடத்துவோரை மனிதர்களாக மதித்து, நட்புறவு கொண்டாடும் முறையில் வரும் சான்றோரையும் ஆன்றோரையும் கொண்டு திருமணம் நடத்திவைக்கப்பெறலாம் என்றும் சீர்திருத்தக்காரர்களால் வலியுறுத்தப்படுகின்றன.

○ ○ ○

**உருவ அருவ வழிபாடுகளில் நம்பிக்கையற்றவர்க்குப் படத்திறப்புகளில் சிந்தையும் பெருமையும் கொள்ள உரிமை ஏது?**

இப்படித் தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த சோமசுந்தரத் தம்பிரான் என்பவர் பொதுக் கூட்டம் ஒன்றில் கேட்டுள்ளார்.

உருவங்களையும் அருவங்களையும் வழிபட்டு வணங்குபவர்கள், தம்மைக் காணும் திறனும், தாம் கூறுவனவற்றைக் கேட்கும் திறனும், தம் குறைகளைப் போக்கும் திறனும், தமக்கு நிறைகளைக் கொடுக்கும் திறனும், தமக்கு வழி காட்டும் திறனும் அறிவுரை கூறும் திறனும் அந்த உருவ அருவங்களுக்கு உண்டு என்று நம்புகின்றனர். பகுத்தறிவாளர்கள் அந்த உருவங்களை உருவங்களாகவும், அருவங்களை அருவங்களாகவும் கருதுகிறார்களே ஒழிய, அவைகளுக்கு மேலே கூறப்பட்டுள்ள திறன்கள் உண்டு என்று நம்புவதில்லை. எனவே அவர்கள் அவைகளை வழிபட்டு வணங்குவதில்லை. எந்தக் கருத்துக்களின் அறிகுறியாக அந்த உருவங்களும், அருவங்களும் சமைக்கப்படுகின்றனவோ, அந்தக் கருத்துக்கள், அறிவுக்கு ஒத்துவராதனவாக — தேவையற்றனவாக — பொருத்தமற்றனவாக இருக்குமேயானால், அந்த உருவ அருவங்களைப் போற்றிப் பாராட்ட முற்படுவதில்லை பகுத்தறிவாளர்கள். இந்த அடிப்படையில்தான் 'ஆண்டவன்' உருவ அருவ வழிபாடுகளில் நம்பிக்கையற்று விளங்குகிறார்கள் பகுத்தறிவாளர்கள்.

உருவ அருவ வழிபாடுகள் எந்த அடிப் படையில் அமைந்திருக்கின்றனவோ, அதே அடிப்படையில்தான், அந்த நம்பிக்கையற்ற வர்கள் நடத்தும் படத்திறப்புகளும் அமைந் திருக்கின்றன என்று தம்பிரான் எண்ணிக் கொண்டிருப்பதை நினைத்தால், எள்ளி நகை யாடவேண்டி வருகிறது. புலவர்கள், கவிஞர் கள், வீரர்கள், அரசியல் தலைவர்கள், சீர்திருத் தக்காரர்கள் போன்றவர்களின் படங்களை அல் லது சிலைகளைத் திறந்துவைப்பதில் பகுத்தறி வாளர்கள் சிந்தையும் பெருமையும் கொள்கி றார்கள் என்றால், அந்தப் படங்கள் அல்லது சிலைகள் 'கேட்கும் வரமெல்லாம் அளிக்கும் திறத்தன' என்பதற்காக அல்லவே! அந்தப் படங்களோ அல்லது சிலைகளோ காணும் திறனையும், கேட்கும் திறனையும், அறிவுறுத் தும் திறனையும், வழிகாட்டும் திறனையும் மனித னைப்போலவோ அல்லது மனிதனுக்கு மேலாகவோ பெற்றிருக்கவில்லை, அவை வெறும் ஆற்றல் அற்ற பொருள்கள்தாம், அவற்றை நாம் என்ன செய்தாலும், அதனைப் பொருட்படுத்தும் ஆற்றல் அவைகளிடத்தில் ஒரு சிறிதும் இல்லை என்றுதான் பகுத்தறி வாளர்கள் கருதுகிறார்கள். அதுபோலவே தான் 'ஆண்டவன்' உருவங்களையும் அருவங் களையும் தம்பிரான் கருதுகிறாரா என்று கேட்க விழைகிறோம்? பகுத்தறிவாளர்கள், தாம் திறந்துவைக்கும் படங்களை அல்லது சிலைகளை இறைஞ்சி நின்று தம் குறைகளைப் போக்கும்படியும், நிறைகளைக் கொடுக்கும்படி யும் கேட்பதில்லையே! அந்தப் படங்களிடத் திலும் சிலைகளிடத்திலும் சொல்லிக் கேட்டுப் பெறுவது ஒன்றுமில்லை என்றுதான் பகுத் தறிவாளர்கள் கருதுகிறார்கள். அதுபோலவே 'ஆண்டவனின்' உருவங்களையும் அருவங்களை யும் கருத தம்பிரான் தயார்தானா என்று கேட் கிறோம்?

விரும்பித் திறந்துவைக்கும் படங்களையும் சிலைகளையும் பார்க்கும்போது பார்ப்பவர்களின் உள்ளத்தில், படங்களும் சிலைகளும் யாரைக் குறிப்பிடுகின்றனவோ, அவர்களின் முன்னை வரலாற்று நிகழ்ச்சிகளும், அவர்களின் கருத் துக்களும், அவர்களைப்பற்றிய கருத்துக்களும் எழும், அவைப் போற்றத்தக்கனவாகையால் பார்ப்பவனின் உள்ளத்தில் உறுதியும் உணர்ச்சியும், ஊக்கமும், பயனும் விளையும் என்றுதான் பகுத்தறிவாளர்கள் கருதி படங் களையும் சிலைகளையும் திறந்துவைக்கிறார்கள். இந்த அடிப்படையில் திறந்துவைக்கும் உரிமை,' 'ஆண்டவன்' உருவ அருவ வழி பாடுகளில் ஏற்படும் நம்பிக்கையற்ற தன் மையை எந்தவகையில் பாதிக்குமோ, தம்பிரா னுக்குத்தான் வெளிச்சம்!

'ஆண்டவன்' படங்களுக்கும், சிலைகளுக்கும் 'சக்தி' இருப்பதாகத் தம்பிரான் உள்பட எல்லா வைதிகர்களும் கூறுகிறார்கள். ஆனால் அவைகளுக்குச் 'சக்தி' இருப்பதாகப் பகுத் தறிவாளர்கள் ஒப்புக்கொள்வதில்லை. பகுத் தறிவாளர்கள் தாம் திறந்துவைக்கும் படங் களுக்கும் சிலைகளுக்கும் 'சக்தி'யிருப்பதாகக் கூறினால், தம்பிரான் துள்ளி எழுந்து "உரிமை ஏது?" என்று கேட்கத் தொடங்குவதில் பொருள் இருக்கமுடியும். 'கேட்கும் வரம் அளிக்கும் திறன்' படங்களுக்கும் சிலைகளுக்கும் இல்லை என்று சொல்லி, சில தேவையான நினைவுகளை வரவழைத்துக்கொள்வதற்கான அறிகுறிகளாகவே அவை திறக்கப்படுகின் றன என்று கூறும்போது; தம்பிரான் சிந்தைத் தெளிவு இல்லாது துள்ளிக்குதித்துக்கேட் கிறார் என்றால், அவர் அறியாமை கண்டு நகைக்கத்தான் வேண்டியிருக்கிறது.



தையற் கலை

கே.பி.சுந்தரம், G.C.T.

காண்வெப்ட் ப்ராக்

இந்த ப்ராக் கலர் துணியிலும். வெள்
த் துணியிலும் தைப்பதாகும். இதற்கு
கயும், காலரும் கிடையாது. பள்ளிக்குச் செல்
ம் சிறுமிகளும், மாணவிகளும் அணிவதைக்
ணலாம்.

## அளவுகள்

டுப்வைரை முதுகு நீளம் 12 அங்.
ழு நீளம் 30 ,,
ர்பு சுற்று அளவு 26 ,,
தித்தோள் அளவு $5\frac{1}{2}$ ,,
டுப்பு சுற்று அளவு 22 ,,
ழுத்து (தலை சுற்று அளவு+2 அங்.) 18 அங்.
ல் இருந்து 0 வரை $12\frac{1}{2}$ அங்.
(இடுப்புவரை முதுகு நீளம் $+\frac{1}{2}$ அங்.)
ல் இருந்து 0 வரை 6 அங்.
($\frac{1}{4}$ மார்பளவில் $+\frac{1}{2}$ அங். குறைவு)




அட்டைப்படம் :

## அடிமைகள் விற்பனை!

ஏலக்கடையில் பொருள்கள் விற்கப்படுவது போல மனிதர்கள் அடிமைகளாக விற்கப்பட்டு வந்தனர் வெகுகாலம்வரை. இப்பொழுது உலக சமாதானம் நிலைபெறப் பாடுபடும் அமெரிக்காதான் அப்பொழுது அடிமைச் சந்தைக்கு பெயர்பெற்ற நாடாகத் திகழ்ந்தது.

அடிமைகளின் வரலாறு பற்றிய கட்டுரை யொன்று அடுத்த இதழில் வெளியாகும்.

(ஆ-ர்.)

---

3-ல் இருந்து 0 வரை 1 அங்.
4-ல் இருந்து 0 வரை $2\frac{1}{2}$ அங்.
5-ல் இருந்து 0 வரை $5\frac{3}{4}$ அங்.
(பாதித்தோள் $+\frac{1}{4}$ அங்.)
6-ல் இருந்து 5 வரை $\frac{3}{4}$ ,,
7-ல் இருந்து 5 வரை நேர்க்கோடு இணைக்க.
8-ல் இருந்து 2 வரை $7\frac{1}{2}$ அங்.
($\frac{1}{4}$ மார்பு $+1$ அங்.)
9-ல் இருந்து 1 வரை $7\frac{1}{2}$ ,,
10-ல் இருந்து 9 வரை $\frac{1}{2}$ ,,
11-ல் இருந்து 12 வரை $12\frac{1}{2}$ ,,
12-ல் இருந்து 9 வரை $7\frac{3}{4}$ ,,
13-ல் இருந்து 11 வரை 6 ,,
13-ல் இருந்து 8 வரை $7\frac{3}{4}$ ,,
14-ல் இருந்து 11 வரை 6 ,,
15-ல் இருந்து 14 வரை $\frac{1}{2}$ ,,
16-ல் இருந்து 14 வரை நேர்க்கோடு இணைக்க.
17-ல் இருந்து 11 வரை $2\frac{3}{4}$ அங்.
18-ல் இருந்து 11 வரை 3 ,,
19-ல் இருந்து 18 வரை 2 ,,
20-ல் இருந்து 9 வரை $\frac{1}{2}$ ,,
21-ல் இருந்து 9 வரை 13 ,,
22-ல் இருந்து 21 வரை $19\frac{1}{2}$ ,,
A-ல் இருந்து 22 வரை 13 ,,
23-ல் இருந்து 9 வரை 13 ,,
24-ல் இருந்து 23 வரை $19\frac{1}{2}$ ,,
A-ல் இருந்து 24 வரை 13 ,,

பின்பக்கம், மேல் பாடியில் 1-க்கும், 10-க்கும் மத்தியில் $\frac{1}{2}$ அங். அகலம் நீளம் 2 அங். இரண்டு டக்கு (டார்ட்டு) அமைக்கவும்.

மேல்பக்கம், பின்பக்கம், முன்பக்ககம், பாடியைத் தனியாக வெட்டிக்கொள்ளவும். முன்பக்கத்தில் திறப்பு இல்லை. கழுத்துக்கும் தோள் வளைவுக்கும் $\frac{1}{2}$ அங், உள் துணி திருப்பி (பால்சன்) தைக்கவும்.

(தொடரும்)

Regd. No. M 6296 MANR

தமிழ் நாட்டில் தலை சிறந்த

**வெண்சங்கு சியக்காய்தூள்**

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

**செல்வம் - ராணி ஊதுபத்திகளை**

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் வெண்சங்கு சியக்காய்த்தூள் தொழிற்சாலை
3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

## மன்றம் பதிப்பக வெளியீடுகள்

இரா. நெடுஞ்செழியன் M. A.
எழுதியவை

**கண்ணீரும் செந்நீரும்**

| | |
|---|---|
| வளர்த்த கழகம் | 0-12-0 |
| மறைந்த திராவிடம் | 0-3-0 |

இரா. செழியன் M. A.
எழுதியவை

| | |
|---|---|
| ராஜாடி ராஜா | 0-12-0 |
| பொது அறிவு | 0-8-0 |

வியாபாரிகட்கு 25% கழிவு. முன்பணம் அனுப்பவேண்டும். வி. பி. கிடையாது.

விபரங்கட்கு :

நிர்வாகி, மன்றம் பதிப்பகம்,
26, நைனியப்பன் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

## மன்றம்

**மலர்-2**

**1953-54**

24 இதழ்கள்கொண்டது
அழகிய முறையில் பைண்ட் செய்யப்பட்
வால்யூம் விலை ரூ. 8-0-0

மலர் 2-ல் முதல் இதழ் தவிர மற்ற 23 இதழ்களும் பைண்ட் செய்யப்படாமல் அனுப்ப ரூ. 6-0-0 அனுப்பவேண்டும்.

தனி இதழ் வேண்டுவோர் (1-5-53 தவிர) இதழ் ஒன்றுக்கு 5 அணா வீதம் தபால்தலைகள் அனுப்புதல் வேண்டும்.

நிர்வாகி, மன்றம்,
26, நைனியப்பன் தெரு, மண்ணடி,
சென்னை-1.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A.,
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-